# விமோசனம்

| தொகுதி 1 | சுக்ல௵ தைமீ | பகுதி 6 |
|---|---|---|

கடவுள் கொடுத்திருக்கும் நல்ல பானங்கள், சுத்தமான தண்ணீரும் அமிருதம் போன்ற பாலும் மோரும். இவைகளை விட்டுவிட்டுக் கள்ளையா குடிப்பது?

# ஆத்ம நஷ்டம்

மதுபானத்தினுல் மனிதனுக்கு விளையும் பல தீமைகளில் ஒவ்வொன்றும் தனித்தனியே அதை யொழிப்பதற்குப் போதிய காரணமாகும். ஆனுல் அத் தீமைகளிலெல்லாம் மிகப் பெரியது எது? குடியினுல் விளையும் ஒழுக்கக் கேடும், அதன் பலனுன ஆத்ம நஷ்டமுந்தான்.

மேனுட்டு நாகரிகத்துக்குப் பணந்தான் பிரதானம். ஆதலின் மேனுட்டார் மதுவுக்கு விரோதமாய் நடத்தும் பிரசாரத்தில் சாதாரணமாய்ப் பண நஷ்டத்தையே முக்கிய காரணமாய்ச் சொல்வார்கள். ஆனுல் நமது பாரத தேசத்தில் இவ்வாறன்று. கள்ளினுல் விளையும் ஆத்ம நஷ்டந்தான் இங்கே பெருந் தீமையாகக் கருதப்படுகிறது. ஆதி காலத்திலிருந்து நமது முன்னேர்கள் கட்குடியைப் பஞ்ச மகா பாதகங்களில் ஒன்ருகக் கருதிவந்தார்கள். பொருளாதார காரணத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவேயில்லை. சமயக் கொள்கையும், சன்மார்க்க நியதியும் மதுபானத்தை நிஷேதித் திருக்கிறபடியால் தான் நமது நாடு இந்த நிலைமையிலாவது இருந்துவருகிறது. அதனுல்தான் இன்னமும் நம் தேசத்தில் பெருந் திரளான ஜனங்கள் மதுவைத் தொடாம லிருந்து வருகிருர்கள்.

மது ஒருவகைக் கொடிய விஷம். அது மனிதனுடைய மூளைக்கேறி அறிவைக் குழப்பிவிடுகிறது. நன்மை தீமைகளை அறியும் சக்தியை இழந்த மனிதன் விரைவில் ஒழுக்கக் கேடெய்துகிருன்; முடிவில் ஆத்ம நஷ்டமடைகிருன். ஆகையால் கள்ளினுல் தனி மனிதனுக்கோ, சமூகத்துக்கோ எவ்விதப் பண நஷ்டமுமில்லை யென்ருலும், காற்றைப் போல் ஒரு காசு செலவின்றிக் கிடைப்பதாயிருந்தாலும், அதைத் தொலைத்து விடவே வேண்டும்.

ஆனுல் கள்ளினுல் உண்டாகும் பண நஷ்டங்கூட மேனுட்டைவிட நமது ஏழைத் தேசத்துக்கே அதிக துன்ப மாகும். ஆங்கில மக்கள் வருஷத்தில் 30 கோடி பவுன் (தலைக்கு $6\frac{1}{2}$ பவுன்) குடிக்குச் செலவு

செய்யலாம். ஆனல் இது அவர்களுடைய வருஷ வருமானத்தில் எட்டில் ஒரு பங்குதான். பாக்கி ஏழு பங்கு (அதாவது சராசரி தலைக்கு ரூ. 650) மற்றக் காரியங்களில் செலவு செய்ய அவர்களுக்கு இருக்கிறது. நமது தேசத்திலோ சராசரி தலா வருமானம் வருஷத்துக்கு ரூ. 50. ஜனங்களில் 100க்கு 90 பேர் விவசாயமோ, வேறு சொற்ப வருமானமுள்ள கைத் தொழிலோ செய்து பிழைப்பவர்கள். இவர்கள் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தில் தினம் நாலு அணு கள்ளு சாராயத்துக்குக் கொடுத்தால் பாக்கி மீதியாவது குடும்பம் உயிர் வாழ்வதற்குக் கூடப் போதியதன்று. பொருள் நஷ்டத்தின் விளைவு இவ்வளவு பயங்கரமாகும்போது, அதுவே ஒழுக்கக்கேடு உண்டாக்கி ஆத்ம நஷ்டத்துக்குக் காரணமாகின்றது. கள்ளின்போதை ஆரம்பித்த வேலையை வறுமை பூர்த்திசெய்து விடுகின்றது.

பாரத நாட்டில் மதுபானத்தை விட்டுவைப்பதற்கு நியாயமான காரணம் ஒன்றுகூடக் கிடையாது. எல்லாக் காரணங்களும் அதை உடனே ஒழிப்பதற்கே உண்டு.

---

"ஆப்காரி சட்டத்துக்கு விரோதமான குற்றங்கள் மாகாண மெங்கும் பெருகிவந்திருப்பதால், சட்டரீதியாக மதுபானம் கிடைக்கும் வழிகளை உடனே மூடிவிடக் கூடாது. அப்படிச் செய்தால் இப்போதை விடக் குற்றங்கள் பெருகிப் பொது ஜனங்களின் சன்மார்க்கம் கெட்டுப் போகும்" என்று சென்னை அரசாங்கக் கலால் அறிக்கை சொல்கிறது. இந்த வாதத்தைக் காந்தியடிகள் "எங் இந்தியா"வில் கண்டித்துள்ளார். "திருட்டுக் குற்றங்கள் வரவர அதிகமாகி வருவதால் களவு கூடாதென்னும் சட்டத்தைத் தளர்த்திவிட வேண்டுமென்று சொல்வதுபோ லிருக்கிறது இந்த வாதம்" என்று அடிகள் கூறுகிறார்.

மகாத்மா மேலும் எழுதியிருப்பதாவது :—"மதுபானம் திருட்டைப் போன்ற அவ்வளவு பெரிய தீமையல்லவென்று சொல்லலாம். இது தவறு. திருட்டுக்கும் இன்னும் எத்தனையோ குற்றங்களுக்கும் மதுபானம் தாய் என்று நிரூபிக்கப்பட் டிருக்கிறது. திருட்டுக்கு லைசென்ஸ் கூடாதென்றால் குடிக்கும் லைசென்ஸ்கூடாது. இதுதான் நியாயம். ஆனல் எப்படியாவது வருமானம் சம்பாதிக்க விரும்பும் அன்னிய அரசாங்கம் தன் தீர நோக்கத்திற் கேற்பக் குதர்க்க வாதம் செய்கிறது."

# பிரமனை வெல்லல்

## 1

[யமதருமராஜா, இரணியகசிபு இருவருக்கும் பேச்சு.]

யமதருமராஜன் :—தான் செய்த புண்ணிய பாவங்களின் பலன்களையே மனிதன் மறுபிறப்பில் சுகமும் துக்கமுமாக அனுபவிக்கிறான். இந்த விதிக்குத்தான் கர்மம் என்று பெயர்.

இரணியகசிபு :—இதென்ன தொல்லை? இப்படியேன் இருக்க வேண்டும்? இதற்கு ஒரு நல்ல யுக்தி கண்டு பிடித்துத்தான் தீருவேன்.

யமன் :—முடியாது, முடியாது. கர்மத்தை யாராலும் வெல்ல முடியாது. ஊழ்வினைப் படிதான் சுகமும் துக்கமும் அனுபவிக்க வேண்டும்.

இரணியன் :—சுகமும் துக்கமும் மனதில் உண்டாகும் உணர்ச்சிதானே?

யமன் :—ஆம், சுகமும் துக்கமும் அகத்தில் தான் உண்டாவது. புறப்பொருளில் அல்ல.

இரணியன் :—உணர்ச்சிகளுடைய ஸ்தானம் மூளைதானே?

யமன் :—அப்படித்தான் வைத்திய சாஸ்திரம் சொல்லுகிறது.

இரணியன் :—அப்படியானால் சுகமும் துக்கமும் வைத்தியர்களே உண்டாக்கலாமே? இதற்குக் கர்மம் ஏன்?

யமன் :—அப்படியன்று. கர்மத்தை வைத்தியர்களால் மாற்ற முடியாது.

இரணியன் :—என்னுடைய வைத்தியர்களால் மாற்ற முடியமென்றே எண்ணுகிறேன். வைத்திய சாஸ்திரம் உண்மையானால் மூளையில் ஆனந்தத்தை உண்டாக்கக் கூடிய ஒரு மருந்தை ஏன் கண்டு பிடித்து துக்கத்தை நீக்கிக் கொள்ள முடியாது? பார்க்கலாம் ஒரு கை.

## 2

[இரணியகசிபு; சுக்கிராசாரியன்.]

இரணியன் :—இந்த கர்வங் கொண்ட யமன் சொன்னதைத் தங்களுக்குச் சொன்னேன். கேட்டீரல்லவா? நம்முடைய வைத்தியர்களுக்குத் தகுந்த உத்திரவிட்டு மூளையில் ஆனந்தத்தை உண்டாக்கும் ஒரு மருந்தை எட்டு நாளுக்குள் கண்டு பிடித்து எனக்குச் சொல்ல வேண்டும்.

சுக்கிராசாரியன் :—மகாராஜாவே! அதில் என்ன பயன்? மருந்தால் உண்டான ஆனந்தம் பொய்தானே?

இரணியன் :—பொய் எது மெய் எது? சுகமும் துக்கமும் மூளையி லுண்டாகும் உணர்ச்சிகளே யல்லவா?

சுக்கிரன் :—சுகமும் துக்கமும் கர்ம பலன். கர்மத்தை ஔஷதத்தால் மாற்ற முடியுமா? இது பரிகாசத்திற்கு இடமாகும். பிரமனுடைய விதியிலிருந்து தப்ப முடியாது.

இரணியன் (கோபித்து) :—இதுதான் தங்களிடமுள்ள குறும்பு. என்னிடம் அந்தப் பிரமனுடைய பெருமையைப் பேச வேண்டாம். கூப்பிடுங்கள் வைத்தியர்களை.

சுக்கிரன் :—உத்திரவுப்படி.

## 3

[இரணியகசிபு; வைத்தியர்கள்.]

இரணியன் :—தெரிந்ததா? ஆனந்தம் என்பது மூளையி லுண்டாகும் ஒரு வித அதிர்ச்சி; துக்கம் என்பது மற்றொருவித அதிர்ச்சி; இதை நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள்.

வைத்தியர்கள் :—ஆம்.

இரணியன் :—எட்டு நாளுக்குள் நீங்கள் தேடி ஒரு மருந்தைக் கண்டு பிடிக்க வேண்டும். ஆனந்த அதிர்ச்சி உண்டாக்கும் மருந்தைக் கொண்டு வந்து தரவேண்டும். இல்லாவிட்டால் கசையடி.

வைத்தியர்கள் :—ஐயோ!

இரணியன் :—ஐயோ என்பதில் பயனில்லை. புலன்களால் மூளையில் உண்டாகும் துக்க உணர்ச்சியைக் கரைத்து ஆனந்த உணர்ச்சியை உண்டாக்கக் கூடிய மருந்து கொண்டு வர வேண்டும். ஒன்று பலவாகவும் பல ஒன்றாகவும், நன்மை தீமையாகவும் தீமை நன்மையாகவும், மேல் கீழாகவும் கீழ் மேலாகவும், இருப்பது இல்லாதபடியும் இல்லாதது இருப்பதாகவும் தோன்றச் செய்யும் நல்ல மருந்தைக் கண்டு பிடித்துக் கொண்டுதான் என்னிடம் வரவேண்டும். மூளை, உணர்ச்சி இவைகளின் இரகசியத்தை நான் தெரிந்து கொண்டு விட்டேன். இவ்வித ஔஷதத்தைச் செய்து பிரமனுடைய நிருவாகத்தைத் தடுமாற்ற மடையச் செய்வது என்னுடைய தீர்மானம். இது கஷ்டமே யில்லை. நீங்கள் என்னை ஏமாற்றப் பார்க்கிறீர்கள்.

வைத்தியர்கள் :—இல்லை, எஜமானே, அப்படியல்ல.

இரணியன் :—என்னிடம் சொல்லிப் பயனில்லை. உங்களுக்கெல்லாம் பிரமனிடம் தான் அனுதாபம். என்னிடம் உங்களுக்கு

அன்புகிடையாது. அவனுடைய ஆட்சியையே ஸ்திரப்படுத்தப் பார்க்கிறீர்கள். நாளை சவுக்கடிக்குப்பின் வேறு பாட்டுப் பாடு வீர்கள்.

வைத்தியர்கள் :—இல்லை, இல்லை, எஜமான்! கட்டாயம் மருந்து தேடிக் கண்டு பிடிப்போம்; சந்நிதானத்தின் உத்திரவுக் குப் பதில் உண்டா?

4

[இரணியகசிபு, சுக்கிராசாரியன். மேலே பிரமனும் நாரதனும்.]

இரணியன் .—ஆசாரியரே, மருந்து தயாராயிற்றா? வைத்தி யர்கள் இன்னும் ஏமாற்றி வருகிறார்களா?

சுக்கிரன் :—மகாராஜாவே, காரியம் முடிந்தது. இதோ மருந்து! நான் என்ன சொல்லுவேன்? இது பிரமனை வெல்லும் மருந்து என்பது நிச்சயம். இதை உட்கொண்ட கொஞ்ச நேரத் திற்கெல்லாம் கர்மம் தலை கீழாகும். பாவம் செய்தவனும் ஆனந்த மடைவான். மனதிற்குள் புகுந்து கொண்டு தொந்திரவு செய்யும் நாராயணன் ஓடிப்போவான். நன்மை தீமை என்னும் பகுத் தறிவு மறைந்துபோகும். துக்கம் எல்லாம் பறந்துபோகும். இரவு பகலாகும், பகல் இரவாகும். சோற்றுக்கில்லாதவன் பணக்காரனைப் போல் சந்தோஷ மடைவான். கடன் பட்டவனும் சிரித்து விளை யாடுவான். குளிர் வெப்பமாகும், வெப்பம் குளிராகும். உடம்பில் நோயிருந்தாலும் சுகமாகத் தோன்றும். பிரமன் விதித்த ஒவ் வொரு நியதியும் தலை கீழாகும்.

[கள்ளுப் பானையைத் தருகிறான்.]

இரணியன் :—பேஷ்! இதைத்தான் நான் கேட்டது. முடியாது என்றீரே, பார்த்தீரா? இதைக் கொண்டு பிரமன் ஆதிக்கத்தை யழிப்பேன்.

சுக்கிரன் :—ஆஹா! அழித்து விடலாம், சந்தேகமில்லை.

* * * *

[இதையெல்லாம் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்த பிரம னும் நாரத ரிஷியும் நகைக்கிறார்கள்.

நாரதன் :—மூர்க்கன் இழிவான கள்ளைக் கொண்டு சுகம் தேடுகிறான்.

பிரமன் :—பொய்ச் சந்தோஷம் பிறகு பெருந் துக்கமாக முடியும் என்பதை இந்த மூடன் அறியவில்லை.]

# குளிருக்கு மதுவேண்டுமா?

அகில இந்திய மதுவிலக்கு சங்கத்தின் காரியதரிசி, மதுவிலக்கை ஆதரித்துத் தீர்மானம் செய்யும்படி, சென்னை மாகாணத்திலுள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் எல்லாவற்றிற்கும் வேண்டுகோள் அனுப்பியிருந்தார். பல ஸ்தாபனங்கள் அவ்வாறே தீர்மானம் செய்திருக்கின்றன. ஆனால் குடகு இராஜ்யத்திலுள்ள மெர்க்காரா நகரத்தின் அக்கிராசனர் பின்வருமாறு பதில் அனுப்பினர் :—

"தங்கள் கடிதம் கிடைத்தது. அது சம்பந்தமாக, குடகு நாட்டின் சீதோஷ்ணநிலை மற்றப் பிரதேசங்களில் உள்ளது போலன்று என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கேயுள்ள ஜனங்கள் முக்கியமாகக் குளிர்காலத்தில் கொஞ்சம் மதுபானம் செய்யாமல் காலந்தள்ளமுடியாது. ஆகவே மெர்க்காரா பட்டண வாசிகளில் பெரும் பான்மையோர் மது பானக் கடைகளை மூடுவதை ஆதரிக்கமாட்டார்களென்று கருதுகிறேன்."

குளிருக்கு மதுபானம் நல்லது என்னும் இந்தப் பொய்க்கொள்கை அடிபட்டுப்போய் வெகுகாலமாயிற்று. ஆயினும் இந்தக் கடிதத்தை மது விலக்கு சங்கத்தின் காரியதரிசி, பம்பாயிலுள்ள பெரிய டாக்டரான ராஜ பல்லி வி. படேல் என்பவருக்கு அனுப்பினர். டாக்டர் படேல் எழுதிய பதில் வருமாறு :—

"மழை அல்லது குளிர் அதிகமுள்ள பிரதேசங்களில் எந்த விதத்திலாவது மதுசாரத்தை உட்கொள்வது முற்றும் தவறு. அதனுல் தேக சுகத்துக்கு நிச்சயமாய்க் கெடுதல் உண்டு. மதுபானம் அருந்தியவுடனே சிறிது நேரம் உடம்பில் ஒருவித கிளர்ச்சி உண்டாயிருக்கும். ஆனால் பின்னால் அவ்வளவுக்குச் சோர்வும், பலவீனமும் ஏற்படும். நோய்களை எதிர்த்து நிற்கும் ஜீவசக்தி உடம்பில் குறைந்து விடும். நீண்டகால அநுபவமுள்ள என்போன்ற வைத்தியர்கள் ஒருமுகமாய் இவ்வித முடிவுக்கு வந்திருக்கிறார்கள். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலுமுள்ள பிரபல டாக்டர்களும் இதே விதமாக அபிப்பிராயப் படுகிறார்கள். சென்ற முப்பது வருஷகாலமாய் நான் அடிக்கடி ஐரோப்பா சென்று கடுங் குளிரான ஆல்ப்ஸ் மலைப் பிரதேசங்களில் அலைந்து திரிந்து வருகிறேன். ஆனால் ஒரு தடவையாவது நான் மதுவைத் தொட்டது கிடையாது. மதுபானம் செய்வதால் உடம்பில் உண்டாகும் சொற்பக் கிளர்ச்சி சூடான வெந்நீர் குடிப்பதாலேயே உண்டாகக்கூடும்."

# கோவிந்தனும் வீரப்பனும்

[ரா-கி.]

கோவிந்தனும், வீரப்பனும் அண்டை வீட்டுக்காரர்கள். வாழ்க்கை நிலைமையில் ஏறக்குறைய எல்லா விஷயங்களிலும் அவர்கள் ஒத்திருந்தார்கள்.

கோவிந்தனுக்குப் பருத்தி ஆலையில் வேலை; வாரம் ஆறரை ரூபாய் சம்பளம். வீரப்பனுக்கு ரயில்வே ஓர்க்ஷாப்பில் வேலை; அவனுக்கும் வாரம் எழு ரூபாய் சம்பளம். மனைவியும் இரண்டு குழந்தைகளும் கோவிந்தனுக்கு உண்டு. வீரப்பனுக்கும் அப்படியே. கோவிந்தன் வாரத்திற்கு $\frac{3}{4}$ ரூபாய் வாடகை கொடுத்து ஐந்தாறு குடித்தனங்கள் உள்ள வீட்டில் ஒரு சின்ன அறையில் குடியிருந்தான். வீரப்பன் இதே மாதிரி அடுத்த வீட்டில் குடியிருந்தான்.

ஆனால் ஒரே ஒரு வித்தியாசம் இருந்தது. வீரப்பன் ஓர்க்ஷாப்பிலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் ஒரு சாராயக்கடை உண்டு. அவன் அந்தக் கடைவழியாகத்தான் வீட்டுக்கு வருவது வழக்கம். கோவிந்தன் ஆலையிலிருந்து வரும்வழியிலும் கள்ளுக்கடை, சாராயக்கடை, பீர்க்கடை எல்லாம் உண்டு. ஆனால் அவன் குறுக்குவழியாகச் சந்து பொந்துகளில் புகுந்து வீட்டுக்கு வருவது வழக்கம்.

இந்தச் சிறு வித்தியாசத்தினால் அவர்களுடைய வாழ்வு முறையில் நேர்ந்த பெரும் வேற்றுமையைச் சொல்கிறேன் கேளுங்கள்.

* * * *

சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்குக் கோவிந்தனுக்கு ஆலையில் சம்பளம் கொடுத்தார்கள். ரூபாய் ஆறரையும் அவன் வாங்கிப்பத்திரமாய் மூடிபோட்டுக் கொண்டு குறுக்கு வழியாக வீடுவந்து சேர்ந்தான். அவன் மனைவி சுந்தரமும், மகன் நடராஜனும் சந்தோஷத்துடன் அவன் வரவை எதிர்பார்த்திருந்தார்கள். நடராஜன் திம், திம் என்று குதித்துக் கொண்டு "அப்பா! சமுத்திரம் பார்க்கப் போகவேண்டும். சமுத்திரம் பார்க்கப் போகவேண்டும்!" என்று கூச்சலிட்டான்.

பிறகு கோவிந்தனும் அவன் மனைவியும் உட்கார்ந்து கணக்குப்பார்த்தார்கள். பின்வருமாறு செலவு ஜாபிதா போட்டார்கள்:—

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| வீட்டு வாடகை ... ... | 0 | 12 | 0 |
| அரிசி ... ... ... | 1 | 8 | 0 |
| பருப்பு, உப்பு, புளி சாமான்கள் | 0 | 8 | 0 |
| மோரும் நெய்யும் ... ... | 0 | 8 | 0 |
| எண்ணெய் ... ... ... | 0 | 4 | 0 |
| கறிகாய் முதலிய சில்லரைச் செலவுகள் ... | 0 | 8 | 0 |
| | 4 | 0 | 0 |

வழக்கமாக சேவிங்ஸ் பாங்கியில் போட்டுவந்த ¾ ரூபாயையும் சேர்த்து ரூ. 4—12—0 தனியாக எடுத்து வைத்தார்கள். பாக்கி செலவு செய்வதற்கு ரூ. 1—12—0 கையில் இருந்தது.

"சரி, சமுத்திரக் கரைக்குப் போகலாம், புறப்படு!" என்றான் கோவிந்தன்.

சுந்தரம் மகனுக்குச் சொக்காயும் குல்லாவும் போட்டு நெற்றியில் பொட்டு வைத்தாள். தானும் முகம்கழுவிக் கண்ணாடி பார்த்துக் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டாள். பிறகு கைக்குழந்தைக்குக் கம்பளிச் சட்டைபோட்டு இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு கிளம்பினாள். வழியில் கோவிந்தன் காலணாவுக்குப் பெப்பர்மிண்ட் வாங்கி மகனுக்குக் கொடுத்தான்.

கடற்கரையில் காற்றுவாங்கப் பெரிய பெரிய மனிதர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள். ஆனால் பெரிய மனிதர், சின்ன மனிதர் எல்லாருக்கும் ஒரே காற்றுதான் அடித்தது. கோவிந்தனும் சுந்தரமும் அலையோரத்தில் உட்கார்ந்து ஆனந்தமாய் அரைமணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். மோட்டாரில் வந்தவர்களைவிட இவர்கள் அநுபவித்த இன்பந்தான் அதிகமென்று சொல்லலாம். நடராஜன் துள்ளிக் குதித்து விளையாடினான். அலைமோதிக் கொண்டு வரும்போது கரைக்கு ஓடுவதும், அலைதிரும்பிச் செல்லும்போது அதைப்பிடிக்க ஓடுவதும் அவனுக்கு அற்புதமான விளையாட்டா யிருந்தது.

இந்த சமயத்தில் தூரத்தில் பட்டாணிக் கடலை முறுக்கு விற்பவன் போய்க்கொண்டிருந்தான். நடராஜன் ஓடிச்சென்று அவனை அழைத்து வந்தான். அரையணாவுக்கு முறுக்கும் முக்காலணாவுக்குக் கடலையும் வாங்கினார்கள். நடராஜனுக்குத் தலைகால் தெரியவில்லை. திரும்பி வீடுபோய்ச் சேரும்வரையில் தனக்குக் கிடைத்த பங்கைத் தின்று கொண்டிருந்தான்.

பொழுதுபோனதும் அவர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள். மத்தியானமே சமைத்து வைத்திருந்த சாப்பாடு தயாராயிருந்தது. எல்லாரும் சாப்பிட்டுவிட்டுக் கவலையின்றித் தூங்கினார்கள். கடற்கரைக்குப் போய் வந்ததற்காகக் கோவிந்தனுக்கான செலவு மொத்தம் $1\frac{1}{2}$ அணுத்தான்.

* * * *

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் எழுந்ததும் இன்றைக்கு என்ன செய்யலாமென்று யோசித்தார்கள். பீபிள்ஸ் பார்க்குக்குப் போக வேண்டுமென்று தீர்மானமாயிற்று. சுந்தரம் அவசர அவசரமாய்ச் சமையல் செய்தாள். கோவிந்தன் மார்க்கெட்டுக்குப் போய்க் கறிகாய் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு வேஷ்டி சொக்காய்களுக்குச் சவுக்காரம் போட்டுத் துவைத்தான். பிறகு குழந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தான். நடராஜன், வீட்டில் போடுவதற்கு வாத்தியார் கொடுத்திருந்த கணக்குகளைப் போட்டான்.

எவ்வளவோ அவசரப்படுத்தியும் கிளம்புவதற்கு மணி ஒன்றாகிவிட்டது. சுந்தரம் சிற்றுண்டிக்காகக் கொஞ்சம் அப்பம் செய்து ஒரு பொட்டணத்தில் கட்டி எடுத்துக்கொண்டாள். புரசவாக்கம் வரையில் அவர்கள் நடந்துசென்று அங்கிருந்து டிராம் வண்டியில் போனார்கள். மாலை நாலு மணி வரையில் பீபிள்ஸ்பார்க்கைச் சுற்றிச் சுற்றி வேடிக்கை பார்த்தார்கள். நடராஜனுக்குக் குரங்குகளை விட்டுப் பிரிந்து வருவதற்கு மனமேயில்லை. மூர்மார்க்கெட்டில் ஊதல் வாங்கித் தருவதாய்ச் சொன்னதின் மேல் தான் அவன் வந்தான்.

இதுவரை டிராம் சத்தம் ஒன்றரையணுவும், பீபிள்ஸ்பார்க் டிக்கட் மூன்றணுவும் ஆக நாலரை அணு செலவாயிருந்தது. மூர்மார்க்கெட்டில் அவர்கள் பின்வரும் சாமான்கள் வாங்கினார்கள் :—

| | | | |
|---|---|---|---|
| கோவிந்தனுக்கு பித்தளை டிபன் பாக்ஸ் | 0 | 11 | 0 |
| சுந்தரத்துக்கு ஒரு தந்தச்சீப்பு | 0 | 2 | 6 |
| நடராஜனுக்கு ஒரு ஊதலும் ஒரு பெல்டும் | 0 | 3 | 0 |
| குழந்தைக்கு ஒரு ரப்பர் பொம்மை | 0 | 2 | 6 |

சாயங்காலம் ஐந்து மணிக்கு அவர்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள். போகும்போது டிராம் சத்தமும் சேர்ந்து ரூ. 1—9—0 செலவாயிற்று. நேற்று $1\frac{1}{2}$ அணு செலவழிந்தது. ஆக ரூ. 1—10—6 போக பாக்கி நின்ற 0—1—6 ஒரு சிமிழில் போட்டு வைத்தார்கள். சுந்தரத்துக்குச் சேலை வாங்குவதற்காக இந்த மாதிரி எற்கனவே ரூ. 2—8—0 வரையில் சேர்ந்திருந்தது.

மறுநாள் திங்கட்கிழமை காலையில் சுந்தரம் புதிய தந்தச் சீப்பினால் தலையைவாரி முடிந்து, நெற்றியில் குங்குமம் இட்டுக்கொண்டாள். சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு சுறுசுறுப்பாக வீட்டுக் காரியங்களைச் செய்தாள். எழரை மணிக்குள் கோவிந்தனுக்குச் சோறுபோட்டு, மத்தியானத்துக்கும் பலகாரம் பண்ணிக்கொடுத்தாள். கோவிந்தன் ஸ்நானம் செய்து, சுத்தமான வேஷ்டியும் சொக்காயும் அணிந்து, புதிய டியன்பாக்ஸைக் கையில் எடுத்துக்கொண்டு உற்சாகத்துடன் ஆலைக்குப் புறப்பட்டான். நடராஜன் இடுப்பில் புதிய பெல்ட்போட்டு அதில் ஊதலைத் தொங்கவிட்டுக்கொண்டு குதூகலத்துடன் பள்ளிக்கூடம் கிளம்பினான். குழந்தை கையில் ரப்பர் பொம்மையை வைத்துக்கொண்டு ஆனந்தமாய் விளையாடிக் கொண்டிருந்தது.

* * * *

இனி, அடுத்த வீட்டில் வீரப்பனுடைய குடும்பத்தார் சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமையை எப்படிக் கழித்தார்களென்று பார்ப்போம்.

சனிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு வீரப்பனுக்கு எழு ரூபாய் கிடைத்தது. அவன் அதைவாங்கி அலட்சியமாய்த் தன் கந்தல் சட்டைப்பையில் போட்டுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். வழியில் பீர்க்கடையைக் கண்டதும் ஒரு நிமிஷம் நின்று தயங்கினான். அப்போது உள்ளிருந்து ஒருவன் "அண்ணே! என் நிற்கிறாய்? வா!" என்றான். வீரப்பன் கடைக்குள் நுழைந்தான்.

முதலில் ஒரு சீசா குடித்துவிட்டுக் கிளம்பி விடலா மென்று நினைத்தான். ஆனால் ஒரு சீசா குடித்ததும் இன்னொரு சீசா குடித்தால் தான் தாகம் தணியுமென்று தோன்றிற்று. ஆனால் தடுத்துக் கொண்டான். ஒரு ரூபாய் கொடுத்துச் சில்லரை கேட்டான்.

சில்லரை கொடுக்கச் சற்று நேரமாயிற்று. இதற்குள் சில சிநேகிதர்கள் வந்தார்கள். அவர்கள் குடிக்கும்போது தான் சும்மாயிருக்கக் கூடாதென்று இன்னொரு சீசா கேட்டான். அதையும் குடித்தபிறகு "இன்று இரண்டு சீசா பீர் குடித்தாகிவிட்டது. நாளைக்கு வரக்கூடாது. ஆகையால் சாராயக் கடையில் ஒரு டிராம் வாங்கிக் குடித்து விடலாம்" என்று யோசித்து அப்படியே சாராயக்கடைக்குப் போனான். ஒரு டிராம் வாங்கிக் குடித்துவிட்டுப் பிறகு இன்னொரு அரை டிராம் போடச் சொன்னான். கடைக்காரன் கொடுத்த சில்லரையில் ஒரு அரைக்கால் ரூபாய் செல்லாப்பணம். வீரப்பனுக்கு போதை நன்று யேறி யிருந்தபடியால் அது தெரியவில்லை. கடைக்காரன் கொடுத்த சில்லரையை எடுத்துச் சட்டைப்பையில் போட்டுக் கொண்டான். அவற்றில் நல்ல இரண்டணா

ஒன்று சட்டைப்பையில் விழாமல் தரையில் விழுந்தது. அதை அவன் கவனிக்கவில்லை. ஆகவே சாயங்காலம் ஆறுமணிக்கு நல்ல பணம் ரூ. 5—12—0 ம் செல்லாப்பணம் இரண்டணுவும் எடுத்துக் கொண்டு அவன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

வீட்டில் அரிசி, பருப்பு சாமான் ஒன்றும் கிடையாது. அன்று காலைச் சாப்பாட்டுக்கே நாகம்மாள் அரிசி கடன் வாங்கிச் சமைத்திருந் தாள். எனவே மிகுந்த எரிச்சலுடன் அவள் வீரப்பன் வரவுக்காகக் காத்துக் கொண்டிருந்தாள். வந்ததும் சண்டை பிடிக்கத் தொடங்கி ஞள். வீரப்பன் தன்னிடமிருந்த பணத்தை அவள் முகத்தில் வீசி எறிந்துவிட்டுத் தானும் கூச்சல் போட்டான். அவர்கள் மகன் ராமன் ஏழு வயதுப் பையன், பயந்து வாசல்புறம் ஓடிப்போனுன்.

நாகம்மாள் அதற்குப் பிறகு கடைக்குப்போய் சாமான் வாங்கிக் கொண்டுவந்து சமையல் செய்தாள். சாப்பிட்டு முடிய இரவு பத்து மணியாயிற்று. இன்னம் அரைமணிநேரம் அவர்கள் காட்டுப் பூனைகள் போல் சண்டைபோட்டுக் கொண்டிருந்துவிட்டுத் தூங்கிப்போனுர்கள்.

* * * *

மறுநாள் காலையில் கறிகாய் வாங்கி வருவதற்காக வீரப்பன் பணம் கேட்டான். நாகம்மாள் செல்லாப்பணம் இரண்டணுவைக் கொண்டு வந்து கொடுத்தாள். வீரப்பன் உடனே சண்டைபிடிக்கத் தொடங்கி னுன். முதல் நாள் இரவு கடைசாமான் வாங்கியபோது நாகம்மாள் ஏமாந்து செல்லாப்பணம் வாங்கி வந்திருக்கவேண்டும் என்று சொன் னுன். "குடிவெறியில் நீதான் வாங்கிக்கொண்டு வந்தாய்" என்ருள் நாகம்மாள். இந்த சண்டையின்போது ராமன் நடுவில் வந்து "நோட்டு பென்சில் வேண்டும்" என்ருன். அவனுக்கு ஒரு அறை கிடைத்தது. நாகம்மாள் போட்டிக்குக் கைக்குழந்தையை அடித்தாள். ஏக ரகளை யாயிற்று. வீரப்பனுக்கு வேஷ்டி துவைக்க நேரங்கிடைக்கவில்லை.

இத்தனை தொந்திரவுகளுக் கிடையில் நாகம்மாள் சமைத்தபடியால் குழம்புக்கு உப்புப்போட மறந்துபோனுள். சாப்பிடும்போது வீரப்பன் குழம்புச் சட்டியைத்தூக்கி நாகம்மாள்மேல் எறிந்தான். அது குழந்தை மீது விழுந்தது. மறுபடியும் ரணகளந்தான்.

இன்று பீர்க்கடைக்குப் போகவேண்டாமென்று முதல் நாள் வீரப் பன் தீர்மானித்திருந்தான். ஆனல் மாலை மூன்றுமணி ஆனதும் இந்தத் தொல்லைகளையெல்லாம் மறந்து சற்றுநேரம் "குஷி" யாக இருந்து வரலாமென்று தோன்றிற்று. ஆகவே முழுரூபாய் ஒன்று எடுத்துக் கொண்டு கிளம்பினுன். சாராயக்கடையைத் தேடிச்சென்ருன்.

சாராயக்கடையில் பன்னிரண்டணு தொலேந்தது. அடுத்த சந்தில் சூதாடும் இடம் ஒன்று உண்டு. வீரப்பன் அங்கே போனுன். பாக்கி நாலணுவையும் தொலேத்தான். இருட்டிய பிறகு வீட்டுக்குக் கிளம்பினுன். வழியில் குடிமயக்கத்தில் விளக்குக் கம்பத்தில் முட்டிக்கொண்டான். ஒரு புருவம் விளாங்காய் பெரிது வீங்கிப்போயிற்று. வீட்டுக்குப் போனதும் படுத்துத் தூங்கிப்போனுன்.

நாகம்மாள் சாயங்கால மெல்லாம் ஒரு மூலேயில் படுத்து அழுது கொண்டிருந்தாள். இரவு சமைக்கவில்லே. ராமன் மற்றப் பிள்ளே களுடன் தெருவிலும் சாக்கடையிலும் விளேயாடிவிட்டு இரவு எழு மணிக்கு வீட்டுக்கு வந்தான். நாகம்மாள் மத்தியானம் மீதியிருந்த சோற்றை அவனுக்கும் போட்டுத் தானும் சாப்பிட்டாள். வீரப்பனே எழுப்பிச் சோறுபோடவில்லே.

* * * *

திங்கட்கிழமை காலேயில் வீரப்பனுக்குத் தலேநோவு பலமாயிருந் தது. புருவம் வீங்கி ஒரு கண் மூடிப்போயிற்று. முணு முணுத்துக் கொண்டே உட்கார்ந்திருந்தான். நாகம்மாள் மெதுவாகத்தான் எழுந் திருந்தாள். முதல் நாள் அழுது அழுது இப்பொழுது அவள் முகம் பார்க்கமுடியாத கோரமாயிருந்தது. தலேமயிர் ஒரே பரட்டை. முனகிக் கொண்டே குழம்பும் சோறும் செய்தாள். வீரப்பன் அவசர அவசரமாய் அரைவயிற்றுக்குச் சாப்பிட்டு மத்தியானச் சோற்றுக்காகச் சண்டை போட்டு இரண்டணு எடுத்துக்கொண்டு அழுக்குச் சட்டையும் கந்தல் வேஷ்டியுமாக ஓடினுன்.

ராமனுக்கு அன்று காலே இரண்டு மூன்று தடவை அடி விழுந்திருந் தது. கணக்குப் போடவில்லே யாகையால் பள்ளிக்கூடத்துக்கும் போய் அடிபடவேண்டுமே யென்று அவன் கண்ணேக் கசக்கிக்கொண்டே பள்ளிக்கூடம் புறப்பட்டான்.

கைக்குழந்தையைக் கவனிப்பார் யாருமில்லே. அது ஒரு மூலேயில் படுத்து அழுதுகொண்டிருந்தது.

வீரப்பனேப்போன்ற எத்தனேயோ ஏழைத் தொழிலாளிகளின் வாழ்க்கை கள்ளு, பீர், சாராயக் கடைகளினுல் பாழாகிவருகின்றது. அந்தக் கடைகளேத் தொலேக்க நீங்கள் என்ன உதவி செய்யப் போகி றீர்கள்?

# கள்ளும் துன்மார்க்க நோயும்

சென்னை சுகாதார பிரசார சபையின் ஆதரவில் ஒய். எம். ஸி. ஏ. கட்டிடத்தில் ஒரு பிரசங்கம் நடந்தது. பிரசங்கம் செய்தவர் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் ஹாப்பர் என்பவர். இவர் துன்மார்க்க நோய் சிகிச்சையில் தேர்ச்சிபெற்ற நிபுணர். இவர் செய்த பிரசங்கத்துக்கு சென்னை அரசாங்கத்தின் ஸர்ஜன் ஜெனரல் லெப்டி னண்ட் கர்னல் ஹிங்ஸ்டன் சி. ஐ. இ., ஓ. பீ. இ., ஐ. எம். எஸ். தலைமை வகித்தார். உடம்பைப் பற்றிய விஷயங்களைப் பேசுவதற்கு இவர்களை விடத் திறமை வாய்ந்தவர்கள் உண்டென்று சொல்லமுடியாது.

டாக்டர் ஹாப்பர் தமது பிரசங்கத்தில் சொல்லியதென்ன? 'ஸிபி லிஸ்' எனப்படும் கிரந்திப் புண் நோயின் கொடுமையைப் பற்றியும், அதன் சிகிச்சை முறைகளைப் பற்றியும் அவர் பேசினார். பிறகு அந்த நோய் பரவாமல் தடுக்கும் வழிகளையும் சொன்னார். இந்த வழிகளில் அவர் முக்கியமாகக் குறிப்பிட்டவை (1) விபசார விடுதிகளை யொழித்த லும், (2) மது விலக்கும். மேற்படி துன்மார்க்க நோய்க்காளானவர்களி டையே அவர் ஆராய்ச்சி நடத்தியதில், 100க்கு 95 பேர் மதுபானம் செய்து மயங்கியிருந்தபோது விபசார விடுதிகளுக்குச் சென்றதினால் தான் அந்நோய் பெற்றார்களென்று தெரிய வந்ததாம். குடிப்பழக்கமுள்ள வர்களுக்கு இக்கொடிய நோய்வந்தால் பல சிக்கல்கள் உண்டாகி சிகிச்சை மிகவும் கடினமாகிறதென்றும் அவர் சொன்னார்.

அக்கிராசனம் வகித்த லெப்டினண்ட் கர்னல் ஹிங்ஸ்டன், உபந்நி யாசகர் சொன்னதை ஆமோதித்தார். மதுவிலக்குச் சட்டத்துக்காகக் கிளர்ச்சி செய்வது தங்கள் வேலையல்ல வென்றாலும், மதுவிலக்கு ஏற்பட் டால் இந்த நோயின் சிகிச்சைகளில் இப்போதுள்ள கோளாறுகள் இரா வென்று அவர் ஒப்புக்கொண்டார்.

# மதியீன வருமானம்

மூர்க்கன் என்றும் ஓர் அரசன் இருந்தான். அவன் மந்திரியின் பெயர் துஷ்ட புத்தி. பெயர்களைப் போலவே அவர்கள் குணமும். இராஜாங்கம் எவ்வாறு நடந்ததென்று சொல்லவேண்டுமா? தேசத்தில் வெள்ளாமை குறைந்தது. படிப்பு கிடையாது. தரித்திரமும் சோம்பலும் வளர்ந்தன. ஒரு நாள் இராஜா மந்திரியை அழைப்பித்துப் பொக்கிஷத்தில் எவ்வளவு பணம் இருக்கிறதென்று கணக்குப் பார்த்ததில் மிகவும் குறைவாயிருந்தது. "இதற்கு என்னவழி, மந்திரி, சொல்" என்றான்.

"புதிய வரிபோட வேண்டியதுதான்" என்றான் மந்திரி.

"என்னவரி போடலாம்?" என்றான் மூர்க்கன்.

"நாளை வரை அவகாசம் கொடுங்கள், மகாராஜாவே. யோசனை செய்துதான் சொல்லவேண்டும்" என்றான் மந்திரி.

"ஆமாம். அவசரப்படக்கூடாது. ஏற்கனவே எல்லாரும் வரி அதிகம் என்று குறை கூறிக் கொண்டிருப்பதாய்க் கேள்வி" என்று சொல்லி மந்திரிக்கு அரசன் விடைகொடுத்து அனுப்பினான்.

இரவெல்லாம் மந்திரிக்குத் தூக்கமில்லை. தன் இஷ்ட தேவதையாகிய பணப் பேயை தியானம் செய்துகொண்டிருந்தான். "எனக்கு ஒரு நல்ல வழிகாட்டு, பணப் பிசாசே" என்று அந்த துஷ்ட தேவதையைத் தொழுதான். காலை நாலுமணி நேரத்தில் திடீர் என்று யோசனை தோன்றிற்று. "ஹா! தெரிந்தது, தெரிந்தது" என்று படுக்கையை விட்டுக் குதித்து எழுந்தான்.

மனைவியும் திடுக்கிட்டு எழுந்தாள். ஒருவேளை புருஷனுக்கு புத்தி மாறிவிட்டதோ என்று பயந்தாள். "என்ன இப்படி எழுந்தீர்கள்? தினம் 7மணி வரையில் தூங்குவீர்களே!" என்றாள்.

"உனக்கு விஷயம் தெரியாது. புதுவரி கண்டுபிடித்தேன்" என்றான் துஷ்ட புத்தி.

“அது என்ன சொல்லுங்களேன்” என்றாள் மனைவி.

“இது வரையில் இராஜாக்கள் தங்கள் பிரஜைகள் பாடு பட்டுச் சம்பாதித்த பொருளின்மேல் வரிபோட்டு வருகிறார்கள். குடிகள் சரியாய் விவசாயம் செய்யாமல் போனால் அரசனுக்கும் வருமானம் குறையும். ஜனங்கள் புத்திசாலிகளாயிருந்தால் தான் பொருள் சம்பாதிப்பார்கள். அவர்கள் சோம்பேறிகளாய்ப்போனால் அவர்கள் கையில் பொருள் சேராது; இராஜாவுக்கும் வரிகுறையும்.”

“இதெல்லாம் யாருக்குத் தெரியாது?” என்றாள் மனைவி.

“அவசரப்படாதே! இதுதான் பெண்புத்தி” என்றான் துஷ்டபுத்தி.

“சொல்லுங்கள். கேட்கிறேன்” என்றாள் மனைவி.

“நம்முடைய நாட்டில் நன்மை குறைந்து தீமை அதிகமாயிற்று. சோம்பேறித்தனம் அதிகமாயிற்று. வியாபாரம் குறைந்தது. இவற்றினால் பொக்கிஷத்தில் பணம் குறைந்து போய் விட்டது” என்றான்.

“ஐயோ! நமக்கு சம்பளம் இனி சரியாய் வராதா?” என்றாள் மனைவி.

“அதைப்பற்றிப் பயப்படாதே, அது ஒருநாளும் குறையாது. புதிய வரிபோட்டால் ஜனங்கள் கொடுக்க மறுப்பார்கள். நன்மைக்கு வரிபோட்டு ஆய்விட்டது. இனி, தீமைக்குத்தான் போடவேண்டும். புத்தியும், உழைப்பும் குறைந்து மதியீனமும், சோம்பலும் நம்முடைய நாட்டில் அதிகமாயின. ஆகையால் இனி அரமனைக்குப் பணம் வேண்டுமானால் மதியீனத்திற்கும் சோம்பலுக்கும் தான் வரிபோடவேண்டும். தெரிந்ததா?”

“சொல்லுங்கள்” என்றாள் மனைவி.

“இராஜ்ஜியத்தில் மதியீனமும் சோம்பலும் இனி வளர்ந்து கொண்டேபோகும். ஆகையால் இனி பழையவரி உபயோகமில்லை. வருங்கால நிலைக்குத் தகுந்த வரி போடவேண்டும். அதைக்கண்டு பிடித்துவிட்டேன்” என்றான் துஷ்டபுத்தி.

“அது என்ன?” என்றாள் மனைவி.

"மதுபானத்திற்கு ஒரு வரிபோடப் போகிறேம்" என்றான் மந்திரி தாழ்ந்த குரலில்.

"கள்ளுக்கு எப்படி வரிபோட முடியும்?" என்றாள்.

"அதற்கெல்லாம் வழியுண்டு. உனக்குச் சொல்ல முடியாது. யாரும் கள்ளு இறக்காமல் செய்துவிட்டு அரசாங்கத்திலேயே கள்ளு இறக்கி எல்லாரும் அரசாங்கத்திலிருந்தே கள்ளு, சாராயம், அபினி முதலிய தாமதப் பொருள்களைப் பணம் கொடுத்துப் பெறவேண்டும் என்று விதி செய்வோம். என்ன விலை போட்டாலும் அதைக் கொடுத்துக் குடித்துப் போவார்கள். புத்தி குறையக் குறைய நமக்கு வருமானம் அதிகமாகும். சோம்பல் அதிகமாக அதிகமாக நமக்கு வரி ஏராளமாகக் குவியும். பசியும் பிணியும் துக்கமும் வளர வளர, நமக்கு ஒன்றும் கஷ்டமில்லை. அதிகமாய்க் குடிப்பார்கள். அரசனுக்குப் பணம் அதிகமாய் வந்து சேரும். பார்த்தாயா?" என்றான் மந்திரி.

"நீங்கள் சொல்வது என்னவோ எனக்குப் பிடிக்கவில்லை. இப்படி எங்கேயாவது நடக்குமா? ஜனங்கள் ஏழைகளாயும் மதியற்றவர்களாயும் போனல் அதிகமாய்க் கள் குடிப்பார்கள், உண்மைதான். ஆனல் குடும்பங்கள் கெட்டுப்போய் நாடு சீக்கிரத்தில் பாழாய்ப் போகுமல்லவா?"

"உனக்கு என்ன தெரியும்? ஸ்திரீகளுக்குக் கூர்மையான புத்தி கிடையாது. சீக்கிரம் எழுந்து சமையல் செய்யச்சொல். சாப்பிட்டு அரண்மனைக்குப் போகவேண்டும்" என்றான்.

# ஒப்பிட்டுப் பாருங்கள்

சென்னை மாகாணத்தில் கள்ளுக்காகும் செலவையும், மற்ற காரியங்களுக்காகும் செலவையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்குச் சென்ற மாதம் கணக்குக் கொடுத்திருந்தோம். இந்தியா முழுவதிற்கும் அதே வகையான கணக்கு கீழே காண்க:—

குடிக்காகவும் மற்ற போதை வஸ்துக்களுக்காகவும்
இந்தியா முழுவதிலும் ஒரு வருஷத்தில்
ஆகும் செலவு

| | |
|---|---|
| குறைந்த பட்சம் | ரூ. 100கோடி |
| இராணுவச் செலவு ... ... | ரூ. 58 கோடி |
| பொதுநிர்வாகச் செலவு ... ... | ரூ. 23 கோடி |
| போலீஸ் ... ... ... | ரூ. 12 கோடி |
| கல்வி ... ... ... | ரூ. 13 கோடி |
| நீதிபரிபாலனம் (கோர்ட்டுகள்) ... ... | ரூ. $5\frac{1}{2}$ கோடி |
| பஞ்சநிவாரணம் ... ... ... | ரூ. 41 லட்சம் |
| நிலவரியில் வருமானம் ... ... | ரூ. 37 கோடி |
| வருமானவரி ... ... ... | ரூ. 17 கோடி |
| ரயில் வருமானம்—பிரயாணிகள் ... ... | ரூ. 40 கோடி |
| ஷை — சாமான் ... ... | ரூ. 79 கோடி |

கல்விக்கு 13 கோடி ; கள்ளுக்கு 100 கோடி ! மற்ற தேசங்களின் நிலைமை எப்படியானாலும், ஏழை இந்தியாவைப் பொறுத்த வரையில் குடியை உடனே ஒழித்துத் தீரவேண்டும்.

# தூக்கு தண்டனை யாருக்கு?



படத்தில்காணும் மூவரும் ஏழைக் குடியானவர்கள். ஏழைகளானாலும் சந்தோஷத்துக்குக் குறைவில்லை. எவ்வளவு மகிழ்ச்சியோடு அவர்கள் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் போகிறார்கள், பாருங்கள்! அதிலும் மறுநாள் பொங்கல் பண்டிகையாதலால் குதூகலம் அதிகம். ஆனால் சந்தோஷம், சிரிப்பு, குதூகலம் எல்லாம் கடைக்குள் நுழையும் வரையில்தான். கடையில் நுழைந்து இரண்டு புட்டி குடித்துவிட்டால்?—அடுத்த படத்தைப் பாருங்கள்.

---

இதாலிய நாட்டின் சர்வாதிகாரி முஸோலினி தாம் அதிகாரத்துக்கு வந்து ஐந்து வருஷங்களில் மொத்தம் 27,000 மதுபானக் கடைகளை மூடியிருக்கிறார். "இன்னும் கொஞ்சநாள் பொறுங்கள். எல்லாக் கடைகளையும் மூடிவிடுகிறேன்" என்று சமீபத்தில் அவர் கூறினாராம்.

* * * *

சென்ற மாதம் நாம் அறிவித்தவைகளை யல்லாமல் பின்வரும் ஸ்தல ஸ்தாபனங்களும் பூரண மதுவிலக்கை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றன:—ஆங்கோல், புரோதத்தூர், கர்னூல், சிவகாசி, தோன், திண்டிவனம் தாலூகா போர்டுகள்; தென்னாற்காடு ஜில்லா போர்டு.

சந்தோஷமாய்ப் பேசிச் சிரித்துக்கொண்டு கடைக்குச் சென்றவர்கள் திரும்பி வருகையில் இப்படியானார்கள். குடிவெறி ஏறியதும் காரணமில்லாமல் திடீர் திடீரென்று கோபம் வந்தது. பேச்சு வலுத்துக் கூச்சலாயிற்று. முகங்கள் கோரமாயின. வாய்ச்சண்டை முற்றிக் கைச் சண்டையாக முடிந்தது. சிறியதோர் கலவரம். ஆனால் இது இவ்வளவுடன் போதுமா?

சில சமயம் பெரிய சண்டையும் ஆகும். குடிவெறியில் தலைகால் தெரியாது. கத்தியோ, அரிவாளோ, மண்வெட்டியோ கையில் அகப்பட்டதை எடுத்துக் கொள்வார்கள். கொலை நடப்பதும் உண்டு.

போலீஸார் சும்மா யிருப்பார்களா? சர்க்கார் லைஸென்சு பெற்ற கள்ளுக்கடையில் தானே குடித்தான் என்று அவர்கள் தாட்சண்யம் காட்டுவதில்லை. கலகம் செய்தவர்களைப் பிடித்துக் கையில் விலங்கு பூட்டிக் கொண்டு போகிறார்கள். இப்போது குடிவெறி கொஞ்சம் தணிந்தது!. ஆனால் என்ன செய்யலாம்? 'ஐயோ! கெட்டோமே!' என்று கண்ணீர் விட்டழுவதைத் தவிர வேறென்றும் செய்வதற்கில்லை. வீட்டையும் மனைவி மக்களையும் நினைக்கும்போது துக்கம் அதிகமாகிறது.



வெளியில் போன புருஷன் வரக்காணோமே என்று மனைவியும், வயதான தாயாரும், குழந்தைகளும் வீட்டு வாசலில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எத்தனை நேரம் காத்திருந்தால் தான் என்ன பயன்? போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனவன் வீட்டுக்கு எப்படி வருவான்? மறுநாள் பொங்கல் பண்டிகை எவ்வளவோ சந்தோஷமாய்க் கொண்டாடலாமென்று எண்ணி யிருந்தார்கள். பாழுங் கள்ளினால் அது பெரிய துக்கதின மாயிற்று.



சண்டையில் குத்தப்பட்டவன் இறந்துபோனான். குத்தியவன்மீது கொலைக் குற்றம் சாட்டிக் கச்சேரியில் விசாரணை நடக்கின்றது. "நீ கத்தியால் குத்தியதுண்டா?" என்று மாஜிஸ்ட்ரேட் கேட்கிறார். "குத்தியதுண்டு, எஜமானே! ஆனால் சுயபுத்தியுடன் செய்யவில்லை. குடி வெறியில் குத்திவிட்டேன். கள்ளுதான் காரணம்" என்று பதில் சொல்கிறான். மாஜிஸ்ரேட் என்ன தீர்ப்பு அளிப்பார்? குடியான வனுக்கு தீவாந்தர சிட்சையோ மரண தண்டனையோ, விதிப்பாரா? அப்படிச் செய்தால் அது நீதியாகுமா? அதற்கு மாறாக—



தூக்கு தண்டனை கள்ளுக்கு விதிப்பதன்றே நியாயமாகும்? உண்மைக் குற்றவாளி கள்ளே யல்லவா?

# சங்கரன் நாயர் அறிக்கை

சைமன் கமிஷனுடன் ஒத்துழைப்பதற்கு இராஜப் பிரதிநிதி ஸர் சங்கரன் நாயரைத் தலைவராகக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்தது அனைவரும் அறிந்த விஷயம். இந்தக் கமிட்டியின் அறிக்கை சென்ற மாதத்தில் வெளியாயிற்று. கமிட்டியின் தலைவர் ஸர் சங்கரன் நாயரும், ராஜா நவாப் அலிகான், சர்தார் சிவ தேவ் சிங் என்னும் அங்கத்தினர்களும் சேர்ந்து மேற்படி அறிக்கையுடன் ஒரு தனிக்குறிப்பு எழுதிச் சேர்த்திருக்கிறார்கள். அதில் மதுவிலக்கு முயற்சியைக் குறித்தும், அரசாங்கத்தின் கலால் கொள்கையைப் பற்றியும் அவர்கள் எழுதியிருப்பது வருமாறு :—

51. "இந்திய ஆட்சி சன்மார்க்க முறையில் நடை பெறவேண்டுமானால் பூரண பண சுதந்திரம் இன்றியமையாதது. 1919-ம் வருஷத்தில் கலால் இலாகா மந்திரிகளின் நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டது. அப்போது வருமான மூலங்களை ஒதுக்கப்பட்ட இலாகாக்களுக்கென்றும், மாற்றப்பட்ட இலாகாக்களுக்கென்றும் தனித் தனியே பிரித்து விட வேண்டுமென்று இந்திய அரசாங்கத்தார் யோசனை சொன்னார்கள். புதிய சட்டசபைகள் மதுவிலக்குச் சட்டம் செய்யாமல், கலால் வருமானத்தை அதிகமாக்க முயலவேண்டுமென்பதே இந்த யோசனையின் கருத்து. ஆனால் பார்லிமெண்டரி கமிட்டியார் இந்த யோசனையைப் புறக்கணித்து, வருமான மூலங்களைப் பிரிக்கக் கூடாதென்றும், மந்திரிகளும் நிர்வாக சபை அங்கத்தினர்களும் கலந்து உட்கார்ந்து மொத்த வருமானத்தையனுசரித்து செலவுக்குப் பணம் பிரித்துக்கொள்ள வேண்டுமென்றும் ஏற்படுத்தினார்கள். இப்படியிருந்தும் மந்திரிகள் மதுவிலக்கு முறையைச் சிறிதும் நடத்திவைக்க முடியவில்லை. கல்வி, சுகாதாரம் முதலிய செலவுகளுக்குக் கலால் வருமானம் தேவையா யிருந்தது. இந்த வருமானம் போய்விட்டால் மேற்படி இலாகாக்களுக்கு வேறுபணம் கொடுக்க நிர்வாக சபை அங்கத்தினர் சம்மதிக்கவில்லை.

"மேலும், அன்னிய நாட்டு மது இலாகாவை இந்திய அரசாங்கத்தார் தங்கள் கையிலேயே வைத்துக்கொண்டு மந்திரிகளும் சட்ட சபைகளும் மதுவிலக்கு முறையை நடத்த முடியாமல் செய்தார்கள். தேச மக்களின் கோரிக்கைப்படி குடியை யொழிக்கும் முறையை எங்கே

யாவது கையாண்டு அதன்பலனாக உள் நாட்டு மதுவிற்பனை குறைந்தால், அந்த அளவுக்கு வெளிநாட்டுச் சரக்கு விற்பனை அதிகமாயிற்று. மொத்தத்தில் வருஷத்துக்கு பத்து லட்சம் காலன் வீதம் வெளிநாட்டு மது விற்பனை அதிகமாகி வந்திருக்கிறது. இந்திய சட்ட சபையிலும், இராஜாங்க சபையிலும் உள்ள உத்தியோகஸ்தர்களல்லாத அங்கத்தினர் அனைவரும் இவ்விஷயத்தில் அரசாங்கத்தின் முறையைப் பலமாகக் கண்டித்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் சார்பாகப் பதில் கூறிய சுகாதார இலாகா தலைவர் குடியை ஆதரித்துப் பேசினார். வருமானத்தை முன்னிட்டுப், பிரிட்டிஷ் மது வியாபாரிகளுடைய நன்மைக்காகவும் இந்தியாவின் அன்னிய அரசாங்கம் இந்தியர்களைத் துன்மார்க்கத்தில் வீழ்த்தத் தயங்கவில்லை. ஹிந்துமதமும், இஸ்லாமிய மதமும் மது பானத்தைத் தீயபாவமென்று தடுத்திருப்பதையும் அது பொருட்படுத்தவில்லை. இத்தகைய அரசாங்கத்துக்கு தேசத்தின் கலால் நிர்வாகத்தில் நேர் முகமாகவே, மறை முகமாகவோ சிறிதும் சம்பந்த மிருக்கக் கூடாது. மாகாணங்களின் வருமான மூலங்களை இந்திய அரசாங்கத்தார் எடுத்துக்கொள்ள இடமிருந்தால், மாகாணங்களில் மதுவிலக்குச் செய்யாமல் பார்த்துக் கொள்ளவும் அவர்களால் முடியும். ஆகையால் இந்த அதிகாரம் அவர்களுக்குச் சிறிதும் இருத்தல் கூடாது."

மந்திரிகள் மதுவிலக்கு முறையைக் கைக்கொள்ளாதிருக்கும் பொருட்டே கலால் இலாகா அவர்களுக்கு மாற்றப்பட்டதென்பது வெகு காலமாக அனைவரும் அறிந்ததே. இந்த நிலைமைக்குப் பரிகாரம் என்ன? மாகாண வருமானம் முழுதும் மாகாண அரசாங்கத்துக்கே சேர வேண்டுமென்றும், இந்திய அரசாங்கத்துக்கு இதில் தலையிடும் உரிமை இருக்கக் கூடாதென்றும் ஸர் சங்கரன் நாயரும், அவருடைய சகாக்களும் சொல்கிறார்கள். இதை விடச் சிறந்த வழி, மது அரக்கனின் உயிர் நிலையிலேயே அவனைத் தாக்குவதாகும். இந்தியா தேசம் முழுவதற்கும் பொதுவாக மதுவிலக்குச் சட்டம் செய்துவிட வேண்டும். அமெரிக்காவிலுள்ளது போல் தேசத்தின் அரசியல் அமைப்பிலேயே மதுவிலக்கு ஓர் முக்கிய அம்சமாய் விடவேண்டும். அப்போது இத் தொல்லைகளுக்கெல்லாம் இடமிராது.

# குடியசுரன் பணியாள்

கமலம் ஏனோ வாட்டமுடனிருந்தாள். கமலத்தைப்போல பாக்கிய சாலிகள் கிடையாது என்று மற்றவர்கள் எண்ணியிருந்தனர். ஒரு நாள் இரவு தன் கவலையை சிறிது ஒழித்துவிட்டுத் தன் மக்களுக்குக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தபோது மூத்த புத்திரன் கமலத்தைப் பார்த்து "அம்மா, அப்பா எங்கே?" என்றான். அப்போது கமலத்தின் தேகம் நடுங்கியது. அடுத்த குழந்தையான லக்ஷ்மி வாசலில் ஓடிப் போய்ப் பார்த்தாள். சிறிய குழந்தை கமலத்தின் மடிமீது மெய்மறந்து தூங்கிக் கொண்டிருந்தது. கமலம், "அப்பா வருவார்" என்று தன் புத்திரனை சமாதானம் செய்துவிட்டுக் குழந்தையைப் பிரேமையுடன் முத்தமிட்டுத் தொட்டிலில் கிடத்தினாள். பிறகு பெரிய குழந்தைகளை உறங்கச் செய்தாள். அவர்கள் தூங்கியதும் எழுந்திருந்தாள். வாசற்படியில் நின்று குழந்தைகளை ஒரு தடவை திரும்பிப் பார்த்துவிட்டு வாசற்புறம் வந்தாள். தெருவில் கண்ணுக்கெட்டின தூரம் வரை இரத்தினத்தின் மோட்டார் காணப்படவில்லை. பரிசாரகன் "அம்மா, நீங்கள் போஜனம் செய்தால் வேலைமுடியும். ஐயா எங்கே இப்பொழுது வரப்போகிறார்?" என்றான். கமலம் போஜனம் செய்தாளே தவிரப் பசி உணர்ச்சியே அவளுக்குத் தெரியவில்லை.

இரத்தினம் இரவில் நேரம் பொறுத்து வரத்தொடங்கியதுமுதல் அவள் வேலைக்காரர்களை உறங்கச் சொல்லிவிட்டுத் தானே கதவைத்திறப்பது வழக்கம். இரத்தினம் போதையுடன் வீடு திரும்பி வரும் அலங்கோலத்தை வேலைக்காரர் பார்ப்பதில் அவளுக்குப் பிரியமில்லை. இரத்தினம் அவளோடு பேசமுடியாத நிலையில் சில நாளிருப்பான். சிலநாள் விவரமில்லாமல் பேசுவான். ஆதலின் கமலம் இரவில் அவனை எதுவும் கேட்பதில்லை. மறுநாள் பொழுது விடிந்ததும் கமலம் எதாவது விசாரித்தால் சாதுர்யமாக மறுத்து விடுவான். பொய் என்பதே அறிந்திராத அவனது வாயில் பொய் இப்பொழுது சாதாரணமாக உற்பவித்தது.

ஒரு காலத்தில் கமலமும் இரத்தினமும் அன்னியோன்னியமாயிருந்ததுண்டு. இரத்தினம் குடியரசனுக் கடிமையானது முதல் அவர்கள் வாழ்வு அழிந்து வந்தது. ஒரு சமயம் பிரகாசமாக விளங்கிய அவர்களுடைய "ஆனந்த விலாசம்" பிரகாசமற்று மங்கிக் கிடந்தது. மிதமிஞ்சின சம்பத்தில் மூழ்கிக்கிடந்த அந்தக் குடும்பம் பால்-நெய்-தயிர்,

வண்ணான்-நாவிதன் வரை கடனில் மூழ்கலாயிற்று. குழந்தைகளின் சுக சௌக்கியம்—செல்வாக்கு குறைந்தது. மனக் கவலையால் கமலத்தின் தேக சௌக்கியமும் குறைவுற்றது. கமலம் பணத்தைப் பற்றிக் கேட்டால் வண்டி புறப்படுகையில் 'நாளைக்குத் தருவதாகச் சொல்' என்று கூறிவிட்டு இரத்தினம் சென்று விடுவான். நாளடைவில் இரத்தினம் ஒவ்வொருவராக ஆட்களை வேலையிலிருந்து நீக்கினான். கடைசியில் மோட்டார் வண்டியையும் விற்று விட்டான். குழந்தைகளுக்கு அடிக்கடி நோய் வரத் தொடங்கியது. "ஏற்கனவே சேரவேண்டிய பணம் சேரவில்லை; முன் பணம் கொடுத்தால் தவிர வரமுடியாது" என்று வைத்தியர்கள் சொல்லி விட்டார்கள்.

கமலத்திற்குத் தோழிகள் அதிகமில்லை. இருந்த இரண்டொருவரும் கடன்காரனின் மனைவியென அவளை விட்டொழித்தனர். வீட்டிற்குப் புட்டி வரவழைத்துக் குடிக்கும் தைரியம் இரத்தினத்துக்கு இன்னும் வரவில்லை. பணம் எடுத்துக்கொண்டு தன் நண்பன் விசுவத்தின் வீட்டுக்குப் போய் விடுவான். தப்பித் தவறி வீட்டிலிருந்தாலும் விசுவநாதன் ஆள் விட்டனுப்பினால் கமலம் எவ்வளவு தடுத்தும் கேளாமல் சென்று விடுவான். தான் தன் இஷ்டப்படி சுயேச்சையா யிருக்கமுடியாமையால் மனைவி மக்கள் தனக்கு ஒரு பந்தமெனக் கருதத் தொடங்கினான்.

குடியின் வன்மை அபாரமானது. அதன் வசப்பட்டபின் நீதி, நெறி, தருமம் யாவும் சற்று அகலவேண்டியதே. குடியின் ஆளுகைக்குட்பட்ட மனம் மிக்க திடசாலியாயிருந்து திரும்ப விடுதலை பெறப் பார்த்தாலும் குடியரசன் தன் ஏவலாட்களைப் பாதையில் ஆங்காங்கே நிறுத்தி அதற்குத் தடை உண்டாக்குகிறான். அந்தப் பல ஏவலாட்களையும் மீறி வெளி வருவது அபூர்வமே. இரத்தினத்திற்கு முதற் கவலை குடிதான். அதற்குப் பிறகேதான் குடும்பம்—மனைவி மக்கள் முதலியோர்.

இரத்தினம் வரவரப் பெருத்த குடிகாரனாய்ப் போனதைக் கமலம் கண்டாள். இனிமேல் அவன் மாறுவது முடியாத காரியம் என்று அவள் தெரிந்து கொண்டாள். எங்கு எவ்வித ஆபத்து நேர்ந்து தன் புருஷன் மரணமுறுவானோ என்ற அச்சம் அவள் உள்ளத்தில் உதித்தது. தன் குடும்பத்தைக் காத்தருளும்படி அவள் கடவுளைப் பிரார்த்தித்தாள். கமலத்தின் மூத்த புத்திரன் ஒரு தடவை பெருத்த காயலா வந்து கவனிப்பாரின்றி உயிர் நீத்தான். இந்தத் தீராத துக்கத்தினாலாவது இரத்தினம் வழிப்பட மாட்டானோ வென்று கமலம் ஆவலுடன் எதிர்ப்பார்த்தாள்.

சில நாட்கள் வரை இரத்தினம் மனைவிக்கு ஆறுதலாய் வீட்டிலிருந்து அவளுக்கு உதவி செய்து வந்தான். தன்னருமை நண்பனை

விசாரிக்க விசுவநாதன் தானே இரத்தினத்தின் வீட்டுக்கு வரலானன். எப்படியாவது தன் கணவன் வீட்டில் தங்குகிருரே என்றிருந்த கமலத்திற்குப் புதியதோர் பெருந்துன்பம் நேரிட்டது. புட்டிகள் வீட்டிற்கே வரத் தொடங்கின. கமலம் இரத்தினத்தை வினவினல் 'நான் பணம் கொடுப்பதில்லை. நீ வீண் கவலைப்படாதே!' என்பான். அல்லது 'இதைத் தவிர எனக்கு வேறு என்ன ஆறுதலிருக்கிறது?' என்பான். குடியரசனின் மற்ற சேஷ்டைகளுக்கு இரத்தினம் வசமானபின் கமலம் அவனுடன் பேசக்கூட முடியவில்லை. அவனுக்கு மனைவி-மக்கள் என்ற பாசம் அடியோடு அகன்றது. கமலத்தின் மற்ற இரண்டு குழந்தைகளும் பார்ப்பாரின்றி இறந்துவிட்டன. குழந்தைகளை நினைத்தாவது ஆறுதலடையலாம் என்ற ஆசையும் போயிற்று.

ஒரு நாள் இரத்தினம் அளவு மீறிக் குடித்து விட்டு அர்த்தராத்திரியில் வீட்டுக்கு வந்தான். தள்ளாடிக் கொண்டே உள் நுழைந்து கூடத்திற்கு வந்ததும் தொப்பென்று விழுந்தான். முதலில் சாராயத்தை வாந்தி யெடுத்தான். பிறகு இரத்த ரத்தமாய்க் கக்கினன். கமலம் பிரமைபிடித்தவள் போல் நின்று கொண்டிருக்க, அரை நாழிகை நேரத்தில் அவன் உயிர் போயிற்று.

* * * *

கமலம் தன்னந்தனியளானள். ஆனல் அவள் மனம் இடிந்தவளாகத் தென்படவில்லை. வாழ்க்கையில் ஏதோ ஒரு புதிய உற்சாகம் கொண்டவள்போல் காணப்பட்டாள்.

விசுவநாதன் சதா கமலத்தின் வீட்டிலேயே பழி கிடந்தான். கமலம் தன் நண்பனின் மனைவியானபடியாலும், இப்பொழுது அநாதையாய்ப் போனபடியாலும் அவளை அடிக்கடிபோய் விசாரித்துக்கொள்வதாய் அவன் வெளியில் சொன்னன். ஆனல் ஊரார் இதை நம்பவில்லை. அவர்கள் ஏதேதோ இரகசியமாகப் பேசிக்கொண்டார்கள். கமலத்தின் நடை உடைபாவனையும் இதற்கு அநுசரணையா யிருந்தது.

கமலம் கணவனுடன் நன்ருய் வாழ்ந்த காலத்தில் நாடகங்களுக்கும், சினிமா காட்சிகளுக்கும் அடிக்கடி போவதுண்டு. நாவல்களும் கதைகளும் அவள் ஏராளமாய்ப் படித்திருந்தாள். எனவே தன் அருமைக் கணவன் பிணமாய்க்கிடந்த அன்றிரவு அவள் கதைகளில் படித்ததைப் போல் தானும் பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்று சபதம் செய்து கொண்டாள். இரத்தினத்துக்குக் குடிப்பழக்கம் செய்வித்து அவனை அதிலிருந்து கரை யேற முடியாமல் செய்து தன் வாழ்வைக் குலைத்த துஷ்டனை எப்படியாவது பழி வாங்கவேண்டுமென்று தீர்மானித்தாள்.

அவளுடைய எண்ணத்துக்கு விசுவநாதனும் அறியாமல் துணை செய்வதானன். இரத்தினம் இறந்த சில தினங்களுக் குள்ளேயே அவன்

தன் துர் எண்ணத்தை வெளியிட்டான். கமலம் அதற்கு ஒப்பியதாகக் காட்டி அவனை முற்றும் தன் வசம் வீழ்த்தி வந்தாள்.

விவாகமே செய்து கொண்டு விடலாம் என்றும், ஆனால் கணவன் இறந்தவுடன் மறு மணம் செய்து கொண்டால் ஊரார் பழிப்பார்களாகையால் சில மாத காலம் போகட்டும் என்றும் சொல்லி அவள் நாள் கடத்தினாள். விசுவநாதனுக்கு அவளை விவாகம் செய்து கொள்வதில் விருப்பமில்லை. இருந்தாலும் அவளை எப்படியும் ஏமாற்றி விடலா மென்று நினைத்தான்.

கமலத்துக்கு இப்போது மற்றொரு சந்தேகம் உதித்தது. "இரத்தினம் ஏன் இறந்தான்? எத்தனையோ பேர் குடிக்கிறார்கள். எல்லாரும் செத்தா போகிறார்கள்?" என்றெண்ணினாள். தன் விஷயமாகத் துர் எண்ணங்கொண்டு விசுவமே விஷமிட்டிருப்பானோ என்று ஐயமுற்றாள். ஆனால் உண்மையில் இந்தப் பாதகத்துக்கு விசுவம் உரியவனல்லன். சாராயமே சிலசமயம் திடீர் என்று கொல்லுவதும் உண்டென்பது, பாவம், கமலத்துக்குத் தெரியாது.

இந்த சந்தேகத்தினால் கமலம் தன் தீர்மானத்தில் முன்னைவிட அதிக உறுதி கொண்டாள். பழிவாங்குவதற்குத் தக்க சந்தர்ப்பம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்கிடையில் அவனுடைய பொருளை ஏராளமாய் வாரி இறைத்து விரயம் செய்தாள்.

கடைசியாக ஒருநாள் பெண் ஒருத்தி ஒருநாளும் செய்யத்தகாத-செய்ய விரும்பாத காரியத்தைச் செய்துமுடிக்க நிச்சயித்தாள். விசுவநாதன் வழக்கத்துக் கதிகமாய்க் குடித்துப் போதை கொண்டிருக்கும் சமயம் பார்த்து, இன்னும் கொஞ்சம் சாராயம் எடுத்து அதில்தான் இரகசியமாய் வாங்கி வைத்திருந்த விஷத்தைக் கலந்து கொடுத்துவிட்டாள்.

விசுவநாதன் மூன்றே முக்கால் நாழிகை பயங்கரமான துன்பம் அநுபவித்து விட்டு இறந்துபோனான். அவன் சாவதைப் பார்த்த பின்னர் தானும் விஷங் குடித்துச் சாகவேண்டுமென்று அவள் எண்ணியிருந்தாள். ஆனால் இது கைகூடவில்லை. ஏனென்றால், விசுவநாதன் இறப்பதற்குள்ளேயே, அவன் பயங்கரமான வேதனையைப் பார்த்திருந்த கமலத்துக்குச் சித்தம் சிதறிவிட்டது. பிறகு அவள் தன் ஆயுட் காலமெல்லாம் சிறைச்சாலையில் பைத்தியக்காரியா யிருந்து கழித்தாள்.

குடியசுரனால் இந்தக் குடும்பத்துக்கு நேர்ந்த பயங்கரத்துன்பத்தில், இரத்தினத்தின் உடல் நாசத்தைப் பெரிதென்போமா, கமலத்தின் ஆத்ம நாசத்தைப் பெரிதென்போமா? இந்தக் கேள்விக்குப் பதில் யாரால் சொல்ல முடியும்?

# பணத்திற்கு என்ன செய்வது?

[க. ச.]

மது விலக்கை ஆக்ஷேபிக்கும் இந்தியர் எவருமில்லை. சில ஆங்கிலேயர் மட்டுமே மிதமான குடியில் கெடுதியில்லை யென்று வாதமிடுகிறார்கள். அவர்களும் லாகிரி வஸ்துக்களை வைத்து வியாபாரம் செய்து லாபமடைவோரும், மது விலக்கினால் தங்கள் சம்பளங்கள் குறைந்து விடுமோவென்று திகிலடையும் உத்தியோகஸ்தர்களுமே. இவர்கள் கூற்றை நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. மதுவிலக்குக்குத் தடையாக விருப்பது கலால் வருமானம் ஒன்றே. இந்த வரி நின்றுவிட்டால் அரசாங்கம் எப்படி நடைபெறும் என்ற எண்ணம் சில இந்தியர் மனத்திலும் குடிகொண்டிருக்கிறது.

மதுவிலக்குக்கு இந்த ஆக்ஷேபம் நியாயமானதன்று. திருடன் ஒருவன் தான் திருட்டுத் தொழிலை விட்டால் தனக்கு வேறு வருமானம் கிடையாது என்று வாதாடினானாயின் எந்த நியாயாதிபதியாவது அதை ஒப்புக்கொள்ளுவாரா? மாதரைவிற்று ஜீவிக்கும் ஒருவன் தனக்கு வேறு வருமானம் கிடைக்கும் வரையில் தன் தொழிலை நடத்த வேண்டுமென்றால் அங்கீகரிக்கக் கூடுமா? இந்த தேசத்து ஜனங்கள் யாவரும் மதுபானத்தை திருட்டு, விபசாரம் முதலிய பெரும் பாவங்களில் ஒன்றாக நம்புகிறார்கள். வேறு வருமானம் ஏற்பாடு செய்யும் வரை கள் சாராயக் கடைகள் இருக்கத்தான் வேண்டுமென்பது நியாயமன்று. இது நிற்க.

கலால் வருமானம் இல்லாமல் அரசாங்கம் நடக்க முடியாதென்பதும் உண்மையல்ல. இந்தியா முழுதும் வசூலிக்கப்படும் வரி 236 கோடிக்கு அதிகம். கலால் வருமானம் 24 கோடிக்குக் குறைவு. ஆகையால் எல்லாச் செலவினங்களிலும் 100க்கு 10 குறைத்தால் மதுவிலக்குச் செய்து விடலாம். பத்தில் ஒரு மடங்கு செலவைக் குறைப்பதினால் எந்த வேலை நின்றுவிடும்? சம்பளத்தில் பத்தில் ஒரு பாகம் குறைத்து விட்டால் எந்த உத்தியோகஸ்தனாவது வேலையை விட்டு விடுவானா? இந்திய அரசாங்கத்தார் இஷ்டப்பட்டால் ஒருவித கஷ்டமின்றி நாளைக்கே பூரண மதுவிலக்குச் சட்டம் செய்து விடலாம்.

இந்திய அரசாங்கத்தாரின் உதவியின்றி மாகாணங்களில் மதுவிலக்குச் சட்டம் செய்வதானுல்தான், பணத்துக்கு என்ன செய்வது என்னும் கேள்வி கிளம்பக்கூடும். இது 1919-வது வருஷத்திய சீர்திருத்தத்தில் செய்யப்பட்ட ஒரு துஷ்ட தந்திரத்தின் பயன். வருமான வரி, உப்பு வரி, ஏற்றுமதி இறக்குமதி வரி, தபால்வரி முதலிய நியாயமான வரிகளையெல்லாம் சர்க்கார் எடுத்துக் கொண்டு, நிலவரியையும், கலால் வரியையும் மாகாணங்களுக்கு ஒதுக்கி வைத்தார்கள். மாகாணங்கள் மதுவிலக்குச் சட்டம் செய்யக் கூடாதென்ற கெட்ட எண்ணத்தைக் கொண்டே இந்த சூழ்ச்சி செய்யப்பட்டது. மந்திரிகளின் இலாகாக்களுக்குக் கலால் வரியைக் கொடுத்துவிட்டு நிலவரியை ஒதுக்கப்பட்ட போலீஸ் முதலிய இலாகாக்களுக்கு வைக்க உத்தேசித்திருந்ததாக சங்கரன் நாயர் யாதாஸ்தில் கூறப்பட்டிருக்கிறது. கபடம் வெளியாகுமென்றே இந்த ஏற்பாடு சட்டத்தின் மூலம் செய்யப்படவில்லை. காரியத்தில் அப்படித்தான் நடந்து வருகிறது. மது விலக்கினுல் போலீஸ் இலாகாவுக்குப் பணம் குறைந்துபோகும், ஜில்லா அதிகாரிகளுக்குச் சம்பளம் கொடுக்கமுடியாது என்று யாரும் சொல்ல நாம் கேட்டதில்லை. பள்ளிக்கூடங்கள் நின்று போய்விடும், வைத்திய சாலைகளை மூடிவிடவேண்டும், விவசாய இலாகாவுக்குப் பணம் இராது என்றே கூறப்படுகிறது.

ஆகையால் பணமில்லை என்ற வாதத்தைக் கொண்டு எவரும் மயங்க வேண்டியதில்லை. இந்த வரியை ஏற்படுத்தியதே தவறு. அதைத்திருத்த வேண்டியது இந்திய அரசாங்கத்தாரின் கடமை. இஷ்டப்பட்டால் அவர்கள் இந்த வருமானத்தை எளிதில் விட்டுவிட முடியும். மாகாண ஜனங்களும், மந்திரிகளும் தற்போதைய வரிப் பிரிவினையை ஒப்புக்கொண்டதால் பணத்திற்கு என்ன செய்வதென்ற கேள்வி மலைபோல் பெரிதாகிவிட்டது. இராணுவச் செலவையும் மற்ற நிர்வாகச் செலவுகளையும் குறையுங்கள் என்பதே இதற்குப் பதிலாகும். இந்த உண்மையை நன்கு தெளிந்து, எல்லோரும் கொஞ்சமேனும் கலக்கமின்றி உடனே பூரண மது விலக்கு வேண்டுமென்று கிளர்ச்சி செய்யவேண்டும்.

---

# யானை வளர்ச்சி



சின்னஞ் சிறுயானைக் குட்டி. குழந்தைகள் கூடத்தோட்டு விளை யாடலாம். [1860-ம் வருஷத்தில் இந்திய அரசாங்கத்தின் கலால் வருமானம் 1 கோடி ருபாய் தான்.]




குட்டி வளர்ந்து இளம்யானை யாயிற்று. ஆனாலும் பாகனை மீறி இது என்ன செய்துவிடும்? கையில் அங்குசம் இருக்க அச்சம் என்ன? [1900-ம் வருஷத்தில் கலால் வருமானம் 6 கோடி யாயிற்று. ஆனாலும் ஏழை இந்தியர்கள் தாங்க முடியாத சுமையன்று.]

ஐயோ ! இளம்யானை இராட்சதயானையாய் வளர்ந்து கட்டுமீறிப் போய் விட்டது. யானைப்பாகன் பிழைத்தால் கடவுள் புண்ணியந் தான். [1929-ம் ஆண்டில் கலால் வருமானம் 24 கோடி. ஏழைத் குடியாளவர்கள் பாரந் தாங் காது நசுக்கப்படுகிறார்கள்.]

---

## ஒன்பது வருஷக் கதை

கிராமங்களில் நிர்மாண வேலைசெய்து அநுபவம் பெற்றவர்கள் எல் லாரும் ஒரு முகமாகக் கண்டது என்னவென்றால், எத்தகைய முன் னேற்ற முயற்சி செய்தாலும், கள்ளு சாராயக் கடைகள் இருக்கும் வரை யில் தக்க பயன் விளையாது என்பதே. கூட்டுறவுச் சங்கங்களின் அநு பவமும் இதுவே யாகும். கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த பன்னி மடை கிராமத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் 1918-ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டு நாளதுவரை நல்ல வேலைசெய்து வருவதாக அறிகிறோம். இச்சங்

கத்தாரின் 1928-29ம் ஆண்டு அறிக்கையில் பின்வரும் பகுதி காணப்படு கிறது :—

"இந்த கிராமத்திலுள்ள கள்ளுக்கடையை எடுத்துவிட வேணுமாய் தீர்மானித்து அதற்கு ஏற்பாடு செய்யவேணுமாய் சென்னை கவர்ன் மெண்டு சுகாதார இலாகா மந்திரியவர்களை கோரிக்கை செய்யப்பட்டது. ஷை தீர்மானத்தை யூனியன் ஆபீசாரும் அனுகூலமாய் சிபார்சு செய்து அனுப்பியதன்மேல் ஷை தீர்மானம் கனம் மந்திரியவர்களிடமிருந்து கலால் இலாகா கமிஷனர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு கமிஷனர் அவர் கள் தமது 6—12—28 தேதி யிட்ட மெமோவில் ஷை கோரிக்கையை ஜில்லா கலெக்டர் அவர்களுக்கு அனுப்பினர். கலெக்டர் அவர்கள் தமது 25—12—1928 கடிதத்தில் ஷை விஷயத்தை கோயமுத்தூர் ரெவின்யூ டிவிஷனல் எல்லைக்காக ஏற்பட்டுள்ள கலால் விஷயமான அட்வைசரி போர்டாருக்கு அனுப்பும்படி தெரிரிவித்துக்கொண்டார். இதன் பேரில் பஞ்சாயத்தார் 28—12—28 தேதி தங்கள் 1500 நெ. தீர்மானத்தில் இந்த வெகுகாலமான கோரிக்கையை நிறைவேற்றிக் கடையை மூடி விடும்படி கேட்டுக்கொண்டதுடன் அடிக்கடி ஞாபக மூட்டப்பட்டது.

இதன்பேரில் அட்வைசரி கமிட்டியார் தாங்கள் 11—5—1929 தேதியில் கூடப்போகும் மீட்டிங்கில் ஆலோசனைக்கு வைத்திருப்பதாகக் காணும் மீட்டிங் நோட்டீசு விஷய ஜாப்தாவில் உள்படுத்தியிருப்பதாய் தெரிவித்ததுடன் ஷை கடையை எடுத்து விடுவதற்கு உள்ள காரணங் களைத் தெரிவிக்கும்படியும் கண்டிருந்தார்கள்.

அதன் பேரில் இந்த ஆபீசு 1266/3-6-29 தேதிய கடிதத்தில் கார ணங்களைக் குறிப்பிட்டு அனுப்பப்பட்டது. அதன்பேரில் ஷை போர்டுக்கு காரியதரிசியான தாலூக்கா தாசில்தார் அவர்கள் தமது 28—2—29 தேதிய கடிதத்தில் 8—6—29 தேதி கூடின மீட்டிங்கில் எதொரு சிபார் சும் செய்யப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார். இந்நிலைமையி லிருக்கிறது.

இந்த முயற்சியானது 1921-ஆண்டு பன்னிமடை மஹா ஜனங்க ளாலும் 1922ம் வருஷம் முதல் சொசைட்டி மூலமாயும் ஆரம்பிக்கப் பட்டு வருஷா வருஷம் கோரிக்கை செய்துவந்தும் பலன் பெறுவது கனவா யிருக்கிறது."

மேற்படி சங்கத்தின் அக்கிராசனர் நமக்கு எழுதியிருக்கும் கடிதத் தில் "நற்காரியங்களுக்காகக் கொடுபடும் கோ ஆபரேடிவ் சொஸைடி பணங்கள் மதுபானக் கடையிலும் நுழைந்து விடுவது வருந்தத்தக்கது" என்று குறிப்பிட்டிருக்கிறார். இருபது வருஷங்களில் பூரண மதுவிலக் குச் செய்யப் போவதாகக்கூறி, மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் அரசாங் கத்தார் மேற்படி கிராமவாசிகள் ஒருமுகமாக ஒன்பது வருஷமாய் முயன் றும் ஒரு கள்ளுக்கடையை மூடவில்லை!

பூரண மதுவிலக்குச் சட்டம் செய்து நாடெங்கும் உள்ள கள்ளு சாராயக் கடைகளை ஒரேயடியில் தொலைத்தாலன்றி இதுபோன்ற குறை களுக்குப் பரிகாரம் கிடையாது. கிராம நிர்மாண வேலைகளில் முதன்மை யானது கள்ளை யொழித்தலே யாகும்.

# மதுவிலக்குச் சங்கம்

அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் லாகூரில் சென்ற டிசம்பர்மீ 27உ நடைபெற்றது. மிஸ் மேரி காம்பெல் அம்மையார் (உப அக்கிராசனர்), ஸ்ரீமான் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் (காரியதரிசி), ஸ்ரீமான்கள் கௌரி சங்கர் பார்க்கவர், ரலியா ராம், லாலா நந்தலால் ஆகியவர்கள் பிரசன்னமாயிருந்தனர். இக்கூட்டத்தில் மதுவிலக்குச் சங்கத்தின் அமைப்பு விதிகளில் முக்கியமான ஒரு மாறுதல் செய்யப்பட்டது. இதுவரையில் அகில இந்திய மதுவிலக்குச் சங்கத்தில் சேர்வதற்கு மூன்று வழிகள்தானிருந்தன:—

(1) ரூ. 250 கொடுத்துப் போஷகராதல்.

(2) ரூ. 100 கொடுத்து சாச்வத அங்கத்தினராதல்.

(3) உள்ளூரில் மதுவிலக்குச் சங்கம் ஏற்படுத்தி வருஷம் ஐந்து ரூபாய் சந்தாகொடுத்து கிளைச்சங்கமாகப் பதிவு செய்துகொள்ளுதல்.

லாகூர்க் கூட்டத்தில் செய்தமாறுதல் என்னவென்றால், ஸ்தாபனங்களைப் போலவே தனிப்பட்டவர்களும் வருஷம் ஐந்து ரூபாய் சந்தா செலுத்தி மதுவிலக்குச் சங்கத்தின் அங்கத்தினராகலா மென்பதுதான். கள்ளை யொழிக்கும் கிளர்ச்சியில் அபிமானமுள்ள எத்தனையோ பேர் ஒரேயடியாக ரூ. 100 கொடுக்கமுடியாத காரணத்தால் சங்கத்தில் சேர இயலாதவர்களா யிருந்தார்கள். அத்தகையவர்களும் சங்கத்தில் சேர இடமிருக்கவேண்டுமென்றே இம்மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களெல்லாம் இனி மதுவிலக்குச் சங்கத்தில் அங்கத்தினராய்ச் சேர்ந்து இயக்கத்தைப் பலப்படுத்துவார்களென்று நம்புகிறோம்.

லாகூர்க் கூட்டத்தில் செய்யப்பெற்ற மற்றொரு முக்கியமான தீர்மானம், இந்திய மதுவிலக்குச் சங்கத்தை சர்வதேச மதுவிலக்கு சபையுடன் இணைக்க வேண்டுமென்பது.

சங்க அங்கத்தினர்களின் அடுத்த பொதுக் கூட்டத்தை இவ்வருஷம் ஏப்ரல் மீ 19உ சென்னையில் கூட்டுவதென்றும் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

# மதுவிலக்கு மகாநாடு

காங்கிரஸ் வாரத்தில் லாகூர் மதுவிலக்கு சபையாரின் முயற்சியினுல் மதுவிலக்கு மகாநாடு ஒன்று கூட்டப் பெற்றது. ஸ்ரீமன் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் இம் மகாநாட்டில் தலைமை வகித்தார். பின்வரும் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறின:—

(1) குடியினுலும், மற்ற லாகிரிப் பொருள்களினுலும் தேச மக்களுக்குப் பெருந்தீங்கு விளைந்து வருகிறபடியால், பூரண மதுவிலக்குச் செய்தல் தேச நலத்துக்கு இன்றியமையாதது. சமயக் கொள்கைகளினுலும், பரம்பரையான ஆசார வழக்க பழக்கங்களினுலும் இந்நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையோர் பூரண மதுவிலக்குக்குத் தயாராயிருக்கிறுர்கள். அரைகுறையான திட்டங்களால் அவர்களுக்குத் திருப்தி ஏற்படாது.

(2) தேசத்தில் பொது ஊழியத்தில் ஈடுபெட்டிருக்கும் எல்லா வகுப்புத் தொண்டர்களும் பூரண மதுவிலக்கில் அதிக கவனம் செலுத்தி வருவது குறித்து இம் மகாநாடு சந்தோஷப் படுகிறது. ஆனுல் இன்னமும் இவ்வியக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு தேசமெங்கும் ஸ்திரீகளும், புருஷர்களுமடங்கிய சங்கங்கள் ஏற்படுத்தித் தீவிரமாகக் கிளர்ச்சி செய்யும்படியும், குடியை யொழிக்க ஜனங்களிடையிலும் வேலை செய்யும்படியும் இந்த மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

(3) இளைஞர்களின் கல்விப் பயிற்சியினுல் பொது ஜனங்களின் வழக்க பழக்கங்கள் மாறுதலடையுமாதலால், பள்ளிக் கூடங்களில் மதுபானத் தீமையைப்பற்றிப் பாடங்கள் ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

(4) பத்திரிகைகளிலும், பொது ஸ்தலங்களிலும், மதுபான விளம்பரங்கள் செய்ய அநுமதிப்பதற்கு எவ்வித நியாயமும் கிடையாது. மது வியாபாரத்தை உடனே நிறுத்துதல் முடியாதென்று கருதப்பட்டாலும், இத்தகைய விளம்பரங்களை உடனே தடுத்துவிட வேண்டுமென்று இம் மகாநாடு அபிப்பிராயப் படுகிறது. மது விளம்பரங்களினுல் எவ்வளவு லாபம் வருவதாயிருந்தாலும் அதைத் தியாகம்செய்து அவ்விளம்பரங்களைப் போடாதிருக்க வேண்டுமென்று தேச நலத்தில் கவலையுள்ள பத்திரிகைகளை இந்த மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

(5) அரசாங்க உத்தியோகஸ்தர்கள் நடத்தும் விருந்துகள் முதலியவற்றில் மதுபானம் விநியோகிக்கும் தீய வழக்கத்தை இந்த மகாநாடு பலமாய்க் கண்டிக்கிறது. அவ்வழக்கத்தை நிறுத்திவிடும்படி கேட்டுக் கொள்கிறது.

## காங்கிரஸ் மதுவிலக்குப் போர்

லாகூர் காங்கிரஸ் முடிவான பின்னர் புதிய காரியக் கமிட்டியார் கூடி, சென்ற வருஷத்தில் நியமித்த அன்னியத் துணி பகிஷ்காரக் கமிட்டி, தீண்டாமை விலக்குக் கமிட்டி, மதுவிலக்குக் கமிட்டி இவைகளின் வேலையைப் பாராட்டி, மீண்டும் அவ்வேலைகளைத் தொடர்ந்து நடத்தும்படி மேற்படி கமிட்டிகளை புனர் நியமனம் செய்திருக்கிறார்கள். மதுவிலக்குக் கமிட்டியின் அங்கத்தினர்கள்:—

டாக்டர் எம். ஏ. அன்சாரி.
ஸ்ரீமான் வல்லபாய் படேல்
,, இராஜேந்திர பிரஸாத்
,, ச. இராஜகோபாலாச்சாரி (காரியதரிசி.)

வேறு விஷயங்களைப் பற்றி எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், கள்ளை யொழிக்கும் கிளர்ச்சியைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் வாதிகளுக்குள் அபிப்பிராய பேதமே கிடையாது. ஆங்காங்குள்ள ஜில்லா, தாலூகா காங்கிரஸ் கமிட்டிகளும், பிற காங்கிரஸ் அபிமானிகளும் சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம் தீவிரமாக மதுவிலக்கு வேலை நடத்த முயற்சி எடுப்பார்களென்று நம்புகிறோம்.

## கடற்கரைக் கிளிஞ்சல்

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் பெரிய நன்மைகளில் ஒன்று என்னவென்றால், அந்நாட்டில் மதுபான விளம்பரத்தை எங்கும் காணமுடியாது. "உடம்புக்கு நல்லது" "புஷ்டிதரக் கூடியது" "இரத்த விருத்திக்கு மேன்மையானது" என்று பொய் விளம்பரங்கள் செய்து அங்கே ஜனங்களை ஏமாற்றமுடியாது. இது ஒரு பெரிய அநுகூலமல்லவா ?

* * * *

மதுபானம் இழிவாகக் கருதப்படும் பாரததேசத்தில் அன்னிய மது வியாபாரிகள் பொய் விளம்பரங்களை ஏராளமாய்ப் பரப்புகிறார்கள். மது என்னும் விவரம் தெரியாமலே அநேகர் "டானிக்" என்று வாங்கிக் குடித்து அழிகிறார்கள். சீமைச் சரக்கு விளம்பரங்களைப் பார்த்து நாட்டுக் கள்ளுக் கடைக்காரர்கள் கூட விளம்பரப் பலகைகள் தொங்கவிட ஆரம்பித்திருக்கிறார்கள்.

மதுவிலக்கு இயக்கத்தின் அவசியத்தை நமது தலைவர்களில் பலர் இன்னும் நன்குணர்ந்து கொள்ளவில்லை. "இதற்கென்ன இப்போது அவசரம்?" என்னும் மனப்பான்மையோடு காரியம் செய்கிறார்கள். இங்கிலாந்தில் பெயர் பெற்ற ஆக்ஸ்போர்டு கலாசாலையின் வைத்திய ஆசிரியராகிய ஸர் வில்லியம் ஆஸ்லர் என்பவர் சொன்னதைக் கேளுங்கள்:—

"ஒரு வருஷத்திற்கு இங்கிலாந்திலுள்ள பீர் முழுவதையும் சமுத்திரத்தில் கொட்டி விடுங்கள். அதனால் ஆங்கிலமக்கள் அளவிலாத நன்மையடைவார்கள். தற்போது பரோபகாரிகள், வைத்தியர்கள், அரசியல் வாதிகள் இவர்களெல்லாரும் தீர்த்துவைக்க முயன்று கொண்டிருக்கும் எல்லாப் பிரச்னைகளையும் அது ஒன்றினால் தீர்த்துவிடலாம்."

பணம் பெருத்த ஆங்கில நாட்டுக்கு இது உண்மையானால் ஏழை இந்தியா தேசத்துக்கு எவ்வளவு அதிக பொருத்தம் என்று சொல்ல வேண்டுமா?

* * * *

"எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்" என்பது பழமொழி. சிரசிலும் மூளை மிகவும் முக்கியமான பகுதி. இவ்விடத்தில்தான் அறிவு என்னும் விலைமதிப்பில்லாத பொக்கிஷம் இருக்கிறது. இதனாலேயே உடம்பிற்குள் மிகவும் கெட்டியான மண்டை ஓட்டை மூளைக்குப் பாதுகாப்பாகக் கடவுள் அமைத்திருக்கிறார். வெளியிலிருந்து அபாயம் நேராமல் இந்த மண்டை ஓடு மூளையைப் பாதுகாக்கிறது. ஆனால் மூட மனிதன் வாய் வழியாக மதுவென்னும் விஷத்தைச் செலுத்தி அவ்வரிய மூளையின் உட்புறத்துக்குத் தீங்கு விளைவிக்கிறான். இந்த விஷம் முதலில் தாக்குவது மூளைக்குள்ளும் மிகவும் முக்கியமான பகுதியாகும். அதாவது விவேகத்திற்கும் தன்னைத்தான் கட்டுப்படுத்தும் சக்திக்கும் இருப்பிடமான பிரதேசம்.

* * * *

இராமச்சந்திரபுரம், பீமாவரம், திண்டிவனம் தாலூகா போர்டுகளும், நெல்லூர் ஜில்லா போர்டும் தங்களுக்குச் சொந்தமான மரங்களைக் கள்ளுக் கட்ட விடுவதில்லையென்று தீர்மானித்திருக்கின்றன. இந்த நல்ல முறையை மற்ற ஸ்தலஸ்தாபனங்களும் பின்பற்றுமென்று நம்புகிறோம்.

* * * *

அமெரிக்காவில் மதுவிலக்குக்குப் பின்னர் மரணவிகிதம் மிகவும் குறைந்திருக்கிறதாம். சராசரி வருஷத்தில் இரண்டு லட்சம் உயிர்கள் மதுவிலக்கினால் காப்பாற்றப்பட்டு வருகின்றனவென்று அத்தேசத்து ஜனக் கணிதி அறிக்கையினால் தெரியவருகிறது.

* * * *

சாராயங் காய்ச்சும் பிரபல லண்டன் கம்பெனிகளைப் பற்றி சீமையிலுள்ள மது விலக்குத் தொண்டர்கள் சிலர், விசாரணை நடத்தினார்கள். இவற்றுள் நாலு கம்பெனிகளின் பங்குதாரர் ஜாபிதாவைப் பார்த்தபோது, பின் வருவோர் பங்கு பெற்றிருந்தார்களென்று தெரிய வந்தது.

உயர்ந்த பிரபு வம்சங்களைச்சேர்ந்த லார்டுகள், பாரனெட்கள் முதலியோர் 250 பேர்.

தரைப்படை, கடற்படைகளைச் சேர்ந்த பெரிய இராணுவ உத்தியோகஸ்தர்கள் 450 பேர்.

வைத்தியர்கள் 120 பேர்.

பாதிரிமார்கள் 70 பேர்.

பெரிய இடங்களில் மதுவிலக்குக்கு விரோதமாய்ப் பேசப்படுவதின் காரணம் இப்போது தெரிகிறதல்லவா?

* * * *

இலங்கைக் கவர்னராயிருந்த ஸர் வில்லியம் கிரிகரீ என்பவர் ஒரு சமயம் அந்நாட்டுச் சட்டசபையில் பேசும்போது கூறியது :—

"ஆங்கில ஆட்சியினால் இலங்கைக்கு எத்தனையோ நன்மைகள் விளைந்திருக்கின்றன. அவற்றின் பொருட்டு இலங்கை வாசிகள் நன்றி கூற எப்போதும் தயாராயிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் ஒரு பெரிய சாபக் கேட்டையும் இத்தீவு முழுமையும் நாம் பரப்பி யிருக்கிறோம். இதுதான் மதுபானம். இந்தத் தீமையானது நாம் செய்த நன்மையை யெல்லாம் அடித்து விடுவதா யிருக்கிறது."

* * * *

மதுபானத்தை யொழிக்க முயன்ற நமது பழைய அரசர்களில் மைசூரில் அரசாண்ட திப்புசுல்தான் ஒருவர். இவர் கள்ளை யொழிக்கும் பொருட்டுத் தம் இராஜ்யத்திலுள்ள ஈச்சமரங்களை யெல்லாம் வெட்டி விடும்படி உத்திரவிட்டார். அவருடைய இந்த உத்திரவு முழுதும் நிறைவேற்றப்படுவதற்கு முன்னாலேயே அவர் ஆட்சி முடிவுற்றது. ஆனால் அவர் அந்தக்காலத்தில் செய்ய விரும்பிய வேலை இப்பொழுது சூரத் ஜில்லாவில் நடைபெற்று வருகிறது.

* * * *

பர்தோலி வரிகொடா இயக்கத்தின் போது அங்கே மதுவிலக்குக் கிளர்ச்சியும் பலமாக நடந்தது என்று நேயர்கள் அறிந்திருக்கலாம். அவ்வியக்கம் இப்பொழுது சூரத் ஜில்லா முழுதும் தீவிரமாகப் பரவி நடந்து வருகிறது. அநேக கிராமங்களில் சாதிக்கட்டுப்பாட்டின் மூலம் குடியை யொழித்திருக்கிறார்கள்.

* * * *

சூரத் ஜில்லாவில் தென்னைமரம் மிகக் குறைவு. ஈச்சமரம் தான் அதிகம். ஆகையால் ஈச்சமரத்தில் தான் கள்ளிறக்குவது வழக்கம். தீவிரமான பிரசாரத்தின் பயனாகச் சென்ற இரண்டு வருஷகாலமாய் அநேக கிராமங்களில் ஜனங்கள் கட்டுப்பாடாய் மரங்களைக் கள்ளுக்குவிட மறுத்துவிட்டார்கள். இதனால் பல கடைகளை மூட வேண்டியதாயிற்று. ஆனால் இவ்வருஷத்தில் கட்டுப்பாடு செய்திருந்த ஒரு கிராமத்தில் இருவர் மரங்களைக் கள்ளுக்கு விட்டார்கள். பின்னால் அவர்களுக்குப் புத்தி வந்து தாங்கள்செய்த தவறுக்குப் பிராயச்சித்தம் செய்துகொள்ள இசைந்தார்கள். இத்தகைய தவறு மறுபடியும் செய்யாமலிருக்க உறுதி என்ன

வென்று கேள்வி எழுந்தது. "இந்தப் பாழும் மரங்களை வேரோடு பிடுங்கி எறிந்து விடுகிறேன்" என்றார் அவர்களில் ஒருவர். அப்படியே செய்தார். இவரைப் பின்பற்றி இன்னும் பலரும் தங்கள் ஈச்சமரங்களை வெட்டினார்கள்.

* * * *

இந்தச் செய்தி மற்ற கிராமங்களுக்கும் பரவியது. ஆங்காங்கே மரம் வெட்டும் வேலை ஆரம்பமாயிற்று. தற்போது மற்ற தாலூகாக்களிலும் இது பரவியிருக்கிறது. கிராமந்தோறும் கள்ளுக்கு விடக்கூடிய ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டித் தள்ளப்பட்டு வருகின்றன. பச்சை மரத்தை வெட்டுவது அவ்வளவு உசிதமான காரியமா என்பதைப் பற்றி அபிப்பிராய பேதம் ஏற்படலாம். மரங்களை வேறு வழியில் உபயோகப்படுத்த முடியுமானால் வெட்டாதிருப்பதே நலமாகும். எனினும் இவ்வியக்கம் சூரத்தில் மதுவிலக்கைப்பற்றி பொது ஜனங்களுக் கேற்பட்டிருக்கும் உணர்ச்சியை விளக்குகிறதல்லவா ?

* * * *

தற்காலத்தில் சர்வ சாதாரணமாயிருக்கும் மோட்டார் விபத்துகளுக்குப் பெரும்பாலும் குடியே காரணமென்பதில் சந்தேகமுள்ளவர்கள் பின்வரும் கணக்கைக் கவனிக்கவேண்டும். இங்கிலாந்து தேசத்தில் தற்போது மொத்தம் 11,28,200 மோட்டார் வண்டிகள் இருக்கின்றன. ஆனால் அமெரிக்கா தேசத்தில் 2,46,29,921 வண்டிகள் இருக்கின்றன. குடிக்கும் சுதந்திரமுள்ள இங்கிலாந்தில் சென்ற வருஷத்தில் 118 மோட்டார் வண்டிக்கு ஒன்று வீதம் சாலை விபத்துகள் நேர்ந்தன. ஆனால் மதுவிலக்குச் செய்யப்பெற்ற அமெரிக்காவில் 1121 மோட்டார் வண்டிக்கு ஒரு விபத்துவீதம் தான் ஏற்பட்டது. இங்கிலாந்தில் நேர்ந்த விகிதப்படி அமெரிக்காவில் விபத்துகள் நேர்ந்திருந்தால் மொத்தம் 2,09,674 ஜனங்கள் மாண்டிருப்பார்கள் !

* * * *

டாக்டர் ஸலீபி என்பவர் சொல்கிறார் :—" நான் வைத்திய மாணாக்கனாயிருந்தபோது மதுசாரம் ஒரு நல்ல மருந்தென்றும், அது நோய்க் கிருமிகளைக் கொல்லக் கூடியதென்றும் கற்பித்தார்கள். இது வாஸ்தவந்தான். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, நோய்க் கிருமிகளைக் கொல்லுவதற்கு முன் மதுசாரம் நோயாளிகளையே கொன்று விடுவதாயிருந்தது ! ஆகையால் தான் அதை நான் உபயோகிப்பதில்லை."

* * * *

பெண்ணுரிமைக்காகப் பாடுபடுகிறவர்கள் முதலில் கள்ளை யொழிக்க முயலவேண்டும். நாடெங்கும் லட்சக் கணக்கான பெண்கள் கள்ளின் கொடுமையால் இரத்தக் கண்ணீர் வடித்துவருகிறார்கள். குடிகாரனுக்கு அடிமையா யிருப்பதுபோன்ற பயங்கரமான அடிமைத் தனம் வேறொன்றுமில்லை.

"ஆரம்பத்தில் மனிதன் மதுவைக் குடிக்கிறுன். பின்னர் மது மதுவைக் குடிக்கிறது. கடைசியில் மது மனிதனைக் குடிக்கிறது" என்பது ஜப்பான் நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி.

*            *            *            *

"எந்த நாட்டார் நல்ல உணவை மதுவென்னும் விஷமாக மாற்றிக் குடித்து வருகிறுர்களோ, அவர்கள் நாளுக்குநாள் திறமை குறைந்து, உடலையும் மனத்தையும் கெடுத்துக்கொண்டு, முடிவில் சர்வநாசம் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை."—டாக்டர் ஸலீபி எம். டி.

*            *            *            *

"கிரிஸ்துநாதரின் வேலையெல்லாம் மதுவினுல் தடைப்படுவதையும், பயனின்றிப் போவதையும், அழிந்து நாசமாவதையும் நான் காண்கிறேன்."—ரெவரண்டு ஹேஸ்.

*            *            *            *

"தேசத்தின் பொதுவாழ்வுக்கு மதுவியாபாரம் ஒரு பெரிய அபாயமாகிவிட்டது. அது அரசியலில் நேர்மை கெடுவதற்குக் காரணமாயிருக்கிறது."—முதன் மந்திரி ராம்ஸே மக்டனுல்டு.

*            *            *            *

மதுபானம் உண்மையில் ஒரு பானமேயன்று. தண்ணீருக்கும் மது சாரத்துக்குமுள்ள வித்தியாசங்களைக் கவனித்தால் இது நன்கு விளங்கும். (1) தண்ணீர் எரியாது; மதுசாரம் நெருப்புப்பட்டால் உடனே பற்றி எரியும். (2) தண்ணீர் உடம்பைக் குளிரச்செய்யும்; மதுசாரம் உடம்பில் பட்டால் எரிச்சல் எடுக்கும். (3) பூமியில் விதை நட்டுத் தண்ணீர் ஊற்றினுல் முளைகிளம்பும்; மதுசாரம் விட்டால் விதை செத்துவிடும். (4) தண்ணீரை எந்த உணவின்மேல் விட்டாலும் உணவு மிருதுவாகும்; மதுசாரம் எல்லா உணவுகளையும் கெட்டியாக்கும். (5) தண்ணீர் உடம்புக்கு அவசியமான ஓர் உணவு; மதுசாரம் உடம்பு அவசியமில்லாத ஒரு விஷம். (6) தண்ணீர் போதைதராது; மதுசாரம் போதைதரும். (7) உடம்பிலுள்ள ஒவ்வொரு உயிர் அணுவிலும் தண்ணீர் ஓர் அம்சம்; மதுசாரம் உடம்பின் உயிர் அணு ஒன்றில் கூடக்கலந்திராது. (8) தண்ணீர் தாகம் தணிக்கும்; மதுசாரம் தாகத்தை வளர்க்கும்.

*            *            *            *

"பூமி பிளந்து இந்த உலகிலுள்ள மதுபானக் கடைகளை யெல்லாம் விழுங்கிவிடச் செய்வதற்கு என்னிடம் ஒரு மந்திர சக்தி இருந்தால், நான் உடனே அப்படிச் செய்துவிட்டு மனித சமூகத்துக்கு அளவிலாத நன்மை புரிந்ததாக எண்ணி மகிழ்ச்சியடைவேன்."—ஆர்ச் பிஷப்கீன்.

*            *            *            *

"இருபது வயதான இரண்டு இளைஞர்கள் ஒரேவித தேகசுகமுள்ளவர்களென்று வைத்துக் கொள்வோம். இவர்களில் ஒருவன் குடிக்கத் தொடங்கி, மற்றொருவன் குடிக்காதிருந்தால், குடித்தவன் 15 வருஷமும், குடியாதவன் 44 வருஷமும் சாதாரணமாக உயிர் வாழ்வார்கள்"—ஆசிரியர் வம்பி ராஸோ. (இதாலி).

# மது விலக்குப் புத்தகங்கள்

## குடிகெடுக்கும் கள்

[பொருளடக்கம்:—குழந்தைகள் பேச்சு, தலைகீழ் நியாயம், பானைக்கும் சீசாவுக்கும் சம்பாஷணை, கள் வந்த கதை, கலால் வருமானம், விடுதலைப் பாட்டு.]

விலை அணா 1.

## திக்கற்ற பார்வதி

(இது கட்குடியால் வரும் கேட்டைக் காட்டும் ஒரு கதை)

விலை அணா 2.

கிடைக்குமிடம்:

எல்லாக் காதி வஸ்திராலயங்களும்,

அல்லது

காரியதரிசி, காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

Regd. No. M. 2519.

# பொங்கலோ! பொங்கல்!




## அழுக்கெல்லாம் சுட்டெரியுங்கள், கள்ளை ஒழிக்க தீர்மானியுங்கள்.

சென்னை ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, சக்கரவர்த்தி
இராஜகோபாலாசாரியாரால் வெளியிடப்பட்டது.